
# ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்



கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்

கருணாகரன்

மகிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்**

கவிதைகள்

**கருணாகரன்**

முதற்பதிப்பு:
ஒக்ரோபர், 1999

ஓவியம்:
சந்துரு

வெளியீடு:

மகிழ்
469, அக்கராயன் குளம்
கிளிநொச்சி

அச்சமைப்பு:
வவுனியா வடக்கு
ப . நோ . கூ சங்கப் பதிப்பகம்,
புதுக்குடியிருப்பு.

விலை : ரூபா 70/-

Oru Polzuthukku Kaththiruththal
A Collection of Poems by
Karunagaran

First Edition:
October 1999

Published by:
Mahilz

469, Akkarayankulam
Kilinochchi

Cover designed by:
Chandru

Printed at:
Vavuniya North M P. C. S Press
Puthukkudiyiruppu

Price: Rs 70/—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவுக்கும்
ஐயாவுக்கும்
இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சாளரத்தினூடே
# கருணாகரனை....
# அவர்தம்கவிதைகளை...

''உன்னை என்னுள் திணிப்பதையும்
என்னை உன்மீது ஏற்றுவதையும் வெறுக்கிறேன்
உன் மகிழ்ச்சியை நீயே பாடுவதிலும்
என் பாடலை நானே இசைப்பதிலும்
ஆனந்தமுண்டல்லவா?''

இது கருணாகரனின் ஒரு பொழுதுக்காகக் காத்திருத்தலின் முதற்கவிதை. எந்தவேளையிலும் தன்னை இழக்கவும், எவர்மீதாயினும் தன்னைப்படரவிடவும் விருப்புறாமனிதனின் விலாசமிது. கருணாகரனின் கவிதைமட்டுமல்ல கருணாகரனேஇதுதான். கவிதை பற்றிய என்நோக்கும் அதுபற்றிய கருணாகரனின் பார்வையும் வேறுபாடுடையது. வாழ்வின்அழகை, வாழ்வின் சுமையை, அதன் சுருக்கென்று குத்தும் வலியை, வாழ்வின்உயிரை, அதன் விசாலிப்பை, வாழ்வினூடே பெறும் அனுபவத்தை உணர்வதிலும், உணர்த்துவதிலும் எமக்கிடையே வித்தியாசங்களுண்டு. இந்த முரண்களூடேதான் கருணாகரனும் நானும் அருகருகே இருந்து வருகிறோம். சககவிஞர்களாக, நல்ல நண்பர்களாக, ஒருவிதத்தில் உடன்பிறப்புகளாக, உயிர்உலவும் உறவாக வாழ்ந்து வருகிறோம். பொய்யோ, புனைவோ ஏதுமற்றிருப்பதால் அவரவர் வழியில் இருவரும் தத்தம் சுயத்தை இழக்காமலும், வலிந்து இழக்காமலும் பயணத்தில் ஒன்றாகவும், பார்வையில் வேறாகவும் எம்மால் இனியும் இருக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொழுதுக்குக் காத்திருத்தலான இந்தக்கவிதைகளில் ஒன்றைக்கூட கருணாகரன் எந்த விதிகளுக்கமையவும் நிறுவமுயலவில்லை. இதுதான் கருணாகரனின் கவிதா விலாசத்துக்கு வெளிச்சத்தையே வழங்குகிறது. இவரின் கவிதைகள் எதுவுமே ஓங்கியடித்தலறும் ஓலங்களல்ல. குமுறிக் குமுறித் தனக்குள்ளே குமைந்து நெஞ்சின் ஒருமூலையில் மூளும் சிறுபொறியைப் போன்றது. உள்ளிருக்கும் கவிதைகள் எதையெடுத்தாலும் அது தனக்கு மட்டுமே கேட்கும் மெல்லியகுரலில் பாடுகிறது. உரத்த சத்தங்களேதுமின்றி நிலவும், மரமும், பறவையும், பூவும், பூண்டும், பறுகுப்பற்றையும் காலிற்கொலுசு பூட்டிக் கூத்திடுகின்றன. இவைகளின் பாடலிலிருக்கும் சுகமும், சோகமும் வாசிக்கும் எங்களுக்குள்ளேயும் வடிந்து விடுகின்றன. இழந்துபோன ஊருக்குள்ளே நடந்து போகும்போது உனக்கு நான் அந்நியனாகிப் போனேனே என்ற ஆதங்கத்தை கருணாகரனின் கவிதையில் அனுபவிப்பது உண்மையான அனுபவம். அதை அனுபவித்தபோது நானே, நெஞ்சில் நெருஞ்சியேறியது போன்ற வலியையும், துயரையும் பெற்றுத் துடித்துப் போனேன்.

''நிலவெறிக்குது வெறுங்காலத்தில்
வீடுகள்
முற்றங்கள்
தோட்டவெளி
தெரு
எல்லாமே சபிக்கப்பட்டு உறைந்தனபோல
அமுங்கிக் கிடக்கின்றன-''

என்று ஓவென்றிரையும் காற்று மட்டுமுலவும் எம்மூரின் பிம்பத்தை ஓவியமாய் உணர்த்துதல் போலக் கவிதையாக்கியுள்ளார். கருணாகரனின் விழித்திசையும், வழித்திசையும் புதியனபக்கம் போயினும் அவரின் கால்களென்னவோ இன்னும் எம்வாழ்வு, பழக்கவழக்கம், பண்பாடென்று ஊரின்வாழ்விலேயே ஊன்றியுள்ளன என்பதைப் பலஇடங்களில் பார்க்கவும், ரசிக்கவும் முடிகிறது.

''எங்கேயெம் முன்னோரின் கால்பட்டெழுந்த பாதைகள்
வம்சா வம்சமாய் நிலைபேறாய் நாம்வாழ்ந்த வீடுகள்
தென்கரை நீள்வெளியில்
காலவெளியின்றி விளைந்த வயல் நிலங்கள்
எல்லாம் எங்கே எங்கே?
ஆயிரம்கோடி பாடல்களும், பேச்சும், கூத்தும்
மதுவும், வேட்டையும் மாபெரும் பொங்கலுமாய்
நூறாயிரம் ஆண்டுகள்
தொன்மம் கொண்ட எங்கள் வாழ்வு இவ்வூரில்
ஒரு அதிகாலைப் பொழுதிருந்து அழியத்தொடங்கியது-''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குள்ளே யமன் வந்ததையும், ஊர்பிரிந்ததையும், முன்னரெம் ஊரிருந்த முறைமையையும் சொல்லுக்குள் பொருளைச்சுருக்கிக் கருணாகரனால் எப்படிக் கவிதைக்குள் சொருக முடிந்தது என ஆச்சரியப்பட்டுப் போனேன்.

எந்த மயக்கங்களுமற்று இவரின் மனவெளி ஒளி பரவிக் கிடக்கிறது. எம்தாயகத்தின் விடுதலைப்போர் மீதும் அந்தப்போரை நடத்தும் பேரியக்கத்தின்மீதும் இவருக்குப் பற்றுறுதியுண்டு. இதைத்தான் கவிதைகள் பலவற்றில் பதிந்தும் வைத்துள்ளார். எம்பிள்ளைகள் பகைவானவூர்தியைப் பலியாக்கியபோது பாவத்தின் கூடுகள் எரிகின்றன - என்றும்,

''எனது நகரம் அழிக்கப்படினும்
எனது உணவு தடுக்கப்படினும்
சோராதுழைப்பேன்
இரண்டுதுண்டு பனாட்டுப் போதும்
வெடிமணம் அடங்கா நிலத்தில்
உழுந்து பூக்கிறது — ——'' என்றும்

தெற்கில் இராணுவ முகாமிலிருந்து
இடைக்கிடை சத்தங்கள் காற்றில் ஏறிவர
எனது தோழரின் சுமையைப் பங்கிட
கருவேலம் பற்றைகளூடு நடக்கிறேன்'' என்றும்

தன் சரியான தெரிவைத் தெளிவாகவே கூறியுள்ளார். சொல்லத்துடிக்கும் பலதை விரிவஞ்சி விட்டுவிடுகிறேன்.

ஆயினும் கருணாகரனின் கவிதைகளில் நான் தரிசித்ததை, அனுபவித்ததை வாசிக்குமெவரும் தரிசிக்கலாம், அனுபவிக்கலாம். அவ்வளவு அதிகமாகவே அதிலுண்டு. ஊரின்மீதான என்காதல் உருக்கொள்ளும்போது, மனிதம்மீதான அன்பு என்னுள்ளத்தே அலைபுரட்டும்போது, விடுதலை மீதான வெறி என்னுள்ளே மூழும் போது, இன்னும் கவிதை மீதான வாசிப்புத் தவனம் ஏற்படும்போது கருணாகரனின் ஒருபொழுதுக்கு காத்திருத்தலை எடுத்து என்னில் ஒற்றிக் கொள்ளுவேன். இளவல் ஒருவன் வென்றதில் பெருமகிழ்ச்சி எனக்கு.

இதுதான் கவிதை, இப்படித்தான் இதுஇருக்க வேண்டுமென கவிதைக்கு முடிந்த முடிவொன்று கூறி அதையே எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் உச்சமன்றத் தீர்ப்பாக இதுவரையெவரும் கூறவில்லை. அப்படியாக மாற்ற முடியாத தீர்ப்பெதையும் கூறமுடியாதென்பது மட்டுமல்ல, கூறவும் கூடாதென்பதே என்வரிப்பு. இது கவிதைக்குமட்டுமல்ல எல்லா எழுத்துக்கும், கலைகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பொருந்தும். வாழ்வை தரிசிக்கும் திசைகளூடாகவும், திசைகளூடாக அனுபவிக்கும் ரசனைக்கூடாகவும், அந்த ரசனைக்கூடாகப் பெறும் உணர்வுக்கூடாகவுமே கவிதை கசிகிறது. எனவே பார்வை, ரசனை, உணர்வு என்பன கவிஞனுக்குக் கவிஞன் வேறுபாடு கண்டு, இசையானது அவரவர் ராகம், நிரவல், சுரவிஸ்த்தாரங்களுக்கேற்ப வென்றும், தோற்றும் விடுவதுபோல கவிதையும் அவரவர் ஆளுமைக்கேற்ப கோணியும், நிமிர்ந்தும், உலவியும், உச்சங்களை உரசியும் போகிறது. எல்லோருக்கும் பொதுவான படைப்புத் தளம் என்பது எப்படிச்சாத்தியமற்றதோ அதுபோல் எல்லோருக்கும் பொதுவான கவிதையென்பதும் சாத்தியமற்றதே. எனவே கவிதையென்பது இதுதான், இப்படித்தான் என்று எவரும் நிறுவமுயன்றால் அது அவரவர் தத்தம் வசதிக்கேற்பத் தங்களையே நிறுவ முயல்வதாகவே அமையும். கருணாகரனின் விதியுடைப்புக் கவிதைகள் வென்றதுக்கு இதுவே காரணம் எனப் புரியமுடிகிறது.

ஈழத்தமிழ்க்கவிதைப் பரப்பு விசாலமாகிவிட்டது. இருபத்தோராம் நூற்றாண்டில் களமே வெல்லும், புலமே வெல்லுமென இலக்கிய ஜோதிடர்கள் கன்னை பிரித்துக் குறிப்பெழுதத் தொடங்கிவிட்டனர். இதிலென்ன களமும், புலமுமென்ற கூறுகட்டல்? ஈழத்தமிழிலக்கியம் என்பதே இதமாகவிருக்கிறது. அது இங்குவென்றாலென்ன? எங்குவென்றாலென்ன? சிலருக்கு எப்போதுமே கரைகட்டி, கன்னைபிரித்து, பிரித்த ஒருபக்கத்தில் தானும் நின்று, அதற்குள் தானே தலைப்பாகை கட்டி நின்றாடுவதே ஊழியம். ஈழத்தமிழிலக்கியம், ஈழத்தமிழ்க் கவிதை எங்கிருந்தாவது வெல்லட்டும். எமக்கு இன்று வேண்டுவது வெல்லும் ஈழத்தமிழிலக்கியமல்ல - — ..... வெல்லும் ஈழத்தமிழருக்கான இலக்கியமே. இதில் கருணாகரன் கணிசமாக வென்றுள்ளார்.

இருளும் ஒளியும் புணரும் விடிவில்  
இருக்கும் ஈழத்தலத்தில்  
பெருகும் துயரும், துயரில் நிமிரும்  
புதிரும், விளையும் பொழுதில்  
கருணா கரனின் மனிதாயுத்தத்தின்  
கவியும், பணியும், இனியும்  
பெருகா திருக்க வழியே துளதா?  
பெருகும் விடியும் வரையும்.

புத்தூர் கிழக்கு,  
புத்தூர்,  
யாழ்ப்பாணம்,  
12 . 10 . 1999

அன்புடன்,  
- புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைவுகள் அவசியமற்ற குறிப்பு

நெருக்கடி மிக்க நம்காலத்தில்-அலைக்கழிந்து கொண்டிருக்கும் என் வாழ்வில் எழுதப்பட்ட கவிதைகளில் ஒரு தொகுதி இவை. உண்மையைக் கண்டறியும் போதும் அதனோடு இணைந்திருக்கும்போதும் தனிமையும் துயரமும் இயல்பாக வந்து சேர்கின்றன. இந்தத் தனிமையும் துயரமுமே என் வாழ்வின் பெரும் பகுதியாகவும் இருக்கின்றது. ஆனாலும் இது பேராறுதலைத் தருகிறது. இந்த ஆறுதல் நிறைவை ஏற்படுத்துவது. இந்த நிறைவு ஒரு பூரணத்துவமே. இதுவே மகிழ்வும்.

என்னுடைய இத்தகைய ஈடுபாட்டுக்கு ஊக்கமாக இருந்தவர்கள் என் ஐயாவும் அம்மாவுமே. எந்தத் தீர்மானங்களுமில்லாத வாழ்வைக் கற்றுத் தந்தவர் ஐயா. மனமேன்மை குறித்ததே அவரின் சிந்தனையாக இருந்தது. அதிகமும் மௌனமாக இருப்பது அம்மா. அந்த மௌனத்தின் பொருள் எல்லையற்றது; தீவிரமானது; சமரசங்களற்றது. இந்த இரண்டு அம்சங்களும் என் கவிதைகளில் பிரதிபலிக்கக்கூடும். இந்தக் கவிதைகள் குறித்து எனக்கு பெருமையோ ஆட்சேபனையோ இல்லை. என் வாழ்விலும் என் காலத்திலும் இப்படியெல்லாம் எழுத நேர்ந்திருக்கிறது, அவ்வளவுதான். மொழியையும் காலத்தையும் என்னையும் இணைக்க என்னளவில் முயன்றிருக்கிறேன் என்பதைத் தவிர வேறென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பதுகளிலிருந்து எழுதப்பட்ட கவிதைகள் இவை. எழுதப்பட்ட காலத்திலேயே இவை, வெளியிடப்பட்டிருந்தால் இன்னும் அதிக பொருத்தமாக இருந்திருக்கும். அந்த வசதிகள் தவறிவிட்டன. இப்பொழுது இவை வெளிவருவது கூட எதிர்பாராத ஒரு நிகழ்வுதான். இக்கவிதைகள் கால ஒழுங்கில் தொகுக்கப்படவில்லை. அலைக்கழிந்த வாழ்வில் எப்படி அதற்குச்சாத்திய முண்டாகும்? என்னுடைய கவிதைகள் நூலாக வெளிவர வேண்டுமென்று நண்பர்கள் நீண்ட நாட்களாக விரும்பியிருக்கிறார்கள். இப்போது அவர்கள் மகிழக்கூடும். என் கவிதைகளை வெளியிட விரும்பி முயன்று இப்போது அதைச் சாத்தியப்படுத்தியிருக்கிறார் என் சகி வசந்தி.

இக்கவிதைகளை வெளியிட்டிருந்த மல்லிகை, தாயகம், வெளிச்சம், கவிதை, ஈழநாதம், காலச்சுவடு, புலம், புதியகளம், இன்னுமொரு காலடி, வானம் எம் வசம், நிலம், சுபமங்களா, ஈழநாடு மாதமலர் என்பவற்றுக்கும் இந்தத் தொகுதிக்கான முன்னுரையை எழுதியதுடன் இது நல்ல முறையில் வெளிவர தன்னோடு எம்மை இணைத்து உழைத்த கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களுக்கும் இந்தத்தொகுதி வடிவத்திற்கு மேலும் உதவிய முல்லைக்கோணேஸ், சித்தாந்தன், பதிப்பகப் பொறுப்பாளர் கே. பி. றெஜி மற்றும் நண்பர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் ஈழநாதத்துக்கும் பல நிலைகளிலும் என் படைப்புலக வளர்ச்சிக்கு வசதிகள் அளித்த வெளிச்சம் சஞ்சிகைக்கும் நன்றிகள்.

பிரதானவீதி, கருணாகரன்
இயக்கச்சி 10. 10 99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்


| | |
|---|---|
| பூக்குங்காலம் | 01 |
| பேய்தின்ற பழங்கள் | 02 |
| நீழல் | 04 |
| ஒற்றைக் குரலின் சப்தம் | 05 |
| கபாலவெடி | 06 |
| ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல் | 07 |
| ஊர் இழந்தவனின் குரல் | 09 |
| சகிப்பு மீறியெழும் | 11 |
| ஆயிரம் தலைகளின் உண்மைச்சாபம் | 13 |
| ஞானம் கலைந்த காலம் | 15 |
| 1990 மார்கழி 25 | 18 |
| பாவங்களின் கூடுகள் | 20 |
| சிக்கல்நாளின் வலிகள் தீருதல் | 21 |
| இனியொரு நிலை | 23 |
| சூழலின் மறுதலிப்பு | 24 |
| தலைதெறித்த மனிதர்கள் | 25 |
| இரவின் பரிசு | 26 |
| புதிய விதிமுறை | 28 |
| வடு | 29 |
| காட்சி | 30 |
| நீள்வழியில் நிழலாகி | 31 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| உள்முகத்தீ | 32 |
| யாருக்கும் அச்சமின்றி மனசவிழ | 33 |
| துயர் மனிதரும் துணை நடத்தலும் | 34 |
| ஈரங் காயவில்லை என்று நீயும் | 36 |
| எங்கள் கிராமங்கள் நகரங்கள் பற்றிய விவரிப்பு | 37 |
| ஒரு படையினனின் மனக்குறிப்புகளில் | 39 |
| அபாயம் | 41 |
| காற்று அறியும் உண்மை | 42 |
| மின்னல் | 43 |
| என்னுடைய பறவை | 44 |
| வாழும் துரோகம் | 45 |
| அழகிய காதல் | 47 |
| சுடுநிழல் | 48 |
| காற்றின் மணல் முற்றம் | 50 |
| பகிர்ந்து கொள்ளும் கணத்தில் | 52 |
| காலப்பெயர்வு | 53 |
| திசைவெளியில் துளிர்க்கின்றது மரம் | 54 |
| மாயக்கிழவியின் ஓவியம் | 55 |
| புழுக்களின் உலகில் | 56 |
| வருகையாளரிடம் கேள்வி | 57 |
| முதுமை | 58 |
| வானத்தின் நிரந்தரம் | 59 |
| பேய் விழி | 60 |
| துரு ஏறும் காலம் | 61 |
| பூக்களும் வண்ணத்துப் பூச்சியும் | 62 |
| நிழல்பற்றி | 63 |
| 1, 2, 3 | 65 |
| பரிகாசம் | 66 |
| வாசலில் தொங்கும் பகைமனம் | 68 |
| மரங்கள் நிறைந்த நினைவுகள் | 69 |
| பாறையின் சிதைவு | 71 |
| ஒற்றை மயிரின் சரித்திரம் | 72 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்குங்காலம்

நான் நானாக இருப்பதிலும்
நீ நீயாக இருப்பதிலும்
ஏன் நம்மிடையே ஓயாத பிணக்கு?
உன்னை என்னுள் திணிப்பதையும்
என்னை உன் மீது ஏற்றுவதையும் வெறுக்கிறேன்.
உன் மகிழ்ச்சியை நீயே பாடுவதிலும்
என் பாடல்களை நானே இசைப்பதிலும்
ஆனந்த முண்டல்லவா!
உனது கனவுகளை நீயே வரைந்துகொள்
எனது வண்ணங்களை நானே குழைக்கின்றேன்
காலம் ஒரு புதிய பூவாய் மலரட்டும்
வானத்தில் அதன் மலர்ச்சி ததும்பட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேய்தின்ற பழங்கள்

அந்த மழைநாளைப்போல
இன்றைக்கு இல்லைத்தான்
இன்றும் மழை குதித்தோடுகிறது பரந்து சிதறி
திக்கெல்லாம் பரந்து
அன்றைக்கும் மழை குதித்துக் குதித்தே ஓடியது.

அன்று
நானும் நீயும் மனம் கவ்விக்கிடந்தோம்
அது என்ன மகிமைக்காலமா?
பிணைந்து பிணைந்து இரண்டு பட்சிகள்போல
மனம் பொருந்திக் கலந்தோமே
நாங்கள் புரண்ட தரையெல்லாம்
வாசனை பரவி வளர்கிறது என்று புன்னகைத்தோம்
நம் பற்களின் வசீகரத்தில்
ஐநூற்று நாற்பது கோடி மனிதரும் வாலாயப்பட்டனர்
எனறிருந்தோம்.

பிறகு, யாரோ அசுரன் என்னுள்ளே புகுந்துள்ளானென்று
ஒரு நாள் நீ கர்ஜித்தாய்
என் மனம் நஞ்சூறிப் போயிற்றென்றும் தேம்பி அழுதாய்.
நான் மறுத்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கத்தலை வழிமறித்துக் கோட்டை எழுப்பினேன்
உன் மனப்பழத்தைப் பேய் தின்று
போயிற்றென்று தவித்தேன்
பாவங்களின் ரேகைகளில் உன்பலன்
சிக்குண்டு போயிற்றென்று நீ துயருற்றாய்
இருட்காலம் மூடிற்று
நமக்குள்ளே கூரொளிரும் வாள்விழுந்து
திசை ரண்டாகிப் போனோம்
அப்போது
முன்வளவுப் பிறைசூடிப் பூமரம்
கண்விழுத்திக் கதறியது நமைக்கண்டு
புலன் மயங்கி வாடியது புறாக்கண்ணி
தெருவாகை நிழல்கூட நொந்ததல்லவா
மழை ஈரம் வற்றிக் கோடைப்புழுதி
தெருவெல்லாம் மூடியது.

இனி வண்ணத்துப் பூச்சிகளை
ஞாபகங் கொள்வதெங்ஙனம்?
ஒரு பூக்குஞ்சாக இருந்த உன்முகமும்
தலையின் பின்புறம்
ஒளிவட்டம் சுழலுதென்று நீ சொன்ன என்முகமும்
நம் கால்களில் மிதிபட்டுச் செத்தன
சாக்காட்டின் ராக்குரலில்
நம் உறவு புகைபிடித்துக் கிடக்குதென
சரித்திரம் சொல்கிறதாகச் சொல்கிறார்கள் எல்லோரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீழல்

உனது சித்தம் பலித்ததெனில்
கண் திறந்துபார் சித்தார்த்தனே
தலை நிமிரா மனிதரில் புணர்ந்துள்ள கரிப்படிமத்தை
பற்றற்ற விழியால் பார்
இருளும் கவியும் துயரும்
சுமையென வுணரும் காலம் மீந்திருக்கிறதே.

செவிதிற
பறையொலிக்கும் அழுகுரலில்
உன சித்தம் கரையுமே.

போதிசத்வா
மீந்திருக்கிறதே இன்னும்
ஞானம் பெறவேண்டிய எல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றைக்குரலின் சப்தம்

இரத்தத்தில் நின்று பல்லிளிக்கிறது
கண்ணீரைத் துடைக்கும் வகையறியாச்சாலை.
சதா வெறுமையில் நின்றழுகின்றன விருட்சங்கள்
புன்னகையும் கீதமுமில்லையென்ற துக்கம்
வேர்களில் வடிந்திறங்க
நின்றழுகின்றன விருட்சங்கள்.
அதன் முற்காலங்களில்
அது எல்லா உலகங்களையும்
தன்னுடன் வைத்திருந்து இறுமாந்த தெருத்தான்.
பூச்சூடி அலங்கரித்து
போதும் போதுமென்ற மயக்கத்தில் திளைத்திருந்தது
இராப்பகலென்றில்லாது விருந்தெல்லாம் வைத்தது
பிறகு
எல்லாம் விஷக்காடாயிற்று
இரத்தச் சிதிலமும் சிறகின் துடிப்பும்
விருட்சங்களைக் கதறவைத்தது
மல்லாந்து இறந்து கிடந்தது சாலை.
ஒரு நாள்
ஒரு குருவி இடந்தவறிவந்து சாலையோர விருட்சமொன்றில்
மோதி வீழ்ந்தது
க்ஷணத்திலேயே அதன் கண்கள் உருகி அழிந்தன
இற்றுப்போகும் விருட்சத்தில்
மோதிய பட்சியின் சிறுகுகள் கருகின
இறந்துபோன சாலையில் இற்றுப்போகும் மரங்களில்
பட்சியின் துயரம் எதிரொலிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபால வெடி

நிச்சயமான எதிர்காலத்தையும்
பயங்கரமான கனவுகளையும்
தன்வசப்படுத்தியுள்ள சாவு
எனது ஊரில் எனது தெருக்களில்
கருநிழல் படர்ந்த முகத்துடன்
எங்கும் மோதி மோதி அலைகிறது
மனம் நொருக்கும்
நாய்களின் ஊளையை விடவும்
அந்திக் கோழியின் சாக் கூவலை விடவும்
பச்சைநிற வாகனங்களின் உறுமலில்
அது சிரிக்கிறது
அந்த வாகனங்களில் அது வருகிறது
வெறிப் பாடலுடன்
அந்நிய மொழியின் கூச்சலுடன்.

வாகனங்களில் வரும் பேய்களின்
துப்பாக்கி முனையில்
அவைகளின் நெஞ்சுமையத்தில்
அது தயாராயிருக்கிறது
பட்சிகளும் நிலவும் புல்வெளிகளும்
பார்வையற்றுப்போக
அவற்றின் வசீகரம், லயிப்பு
ஆசுவாசம் எல்லாவற்றையும் தின்கிறது சாவு;
எலும்புகளை முறித்தெறிந்து
விழிகளைச் சப்பிவரும் சாவு
எனது பிடரியில் ஓங்கி ஓங்கி அடிக்கிறது
இருளில் மோதி மோதி அலைக்கிறது.

எனது மூளையில் இரத்தம் கொப்பளிக்கக் கொப்பளிக்க
புலனாகா ஒலியில்
அதன் கூச்சல்
சாவு சாவு சாவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்

கண்கள் எரிகின்றன
தூக்கமே இல்லாத நாட்களாக
வாய்த்திருக்கிறது நமது காலம்.

நிலவெறிக்குது வெறுங்காலத்தில்
வீடுகள்
முற்றங்கள்
தோட்டவெளி
தெரு எல்லாம்
சபிக்கப்பட்டு உறைந்தனபோல
அமுங்கிக் கிடக்கின்றன.

எனக்குள் பீதி வளர்கிறது
ஜன்னலின் வெளியே எதுவுமில்லை
எனது மனிதர்
எனது மரங்கள்
எனது பூக்கள்
எனது காற்று
எனது தெரு
எதுவுமே இல்லை—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் நொருங்குண்டு போயின
அழிவில் முடிந்தன.

வெளவால்கள்
ஆட்காட்டி
ஆலாப்பறவை
ஒன்றுமில்லை ஒன்றுமேயில்லை.

இரவிரவாக விழுந்து சிதறும்
ஷெல்களில்
எல்லாம் தூளாகின்றன
வீடுகள்
மரங்கள்
எல்லாம் அழிந்தபின்
இப்போது புழுதிகிளம்பி அலைகிறது.

சாவு நெருங்கிவந்து
என்மூக்கருகில் முகர்ந்து பார்க்கிறது
நான் அழமுடியாமல் நடுங்குகின்றேன்

இன்றைக்கும் எந்நேரம் இது
ஓயுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் இழந்தவனின் குரல்

மீண்டும் வந்திருக்கிறேன்
விடை பெறமுடியாத் தருணமொன்றில்
விட்டோடிப்போன தெருவுக்கு
பாதிமரமும் கிளைகளும் சிதைந்தழிந்த பிறகும்
ஈரம் மிதக்கும் சடைத்தகூழா நிழலுக்கு

என்ன இது
ஊரென்ற ஒரு சிறு உணர்வும் எழ வியதற்று
பேய்க்காடாகிக் கிடக்கிறதே நம் கிராமம்
கண்முன்னால்
வேலிகளைப் பற்றைகள் தின்னுகின்றன
புற்றெழுந்த வீடுகளும்
நொருங்கிய மாடங்களுமாய்
தீயலைந்த தெருவெங்கும்
காற்றின் அழுகுரலே கேட்கிறது.

புதர்கள் மூடிவரும் ஒலி
பாம்புகள் அரையும் இரைச்சல்
தவித்துப் பறக்கும் ஒற்றைப்பறவை
விழியின் ஓட்டைவழி
நுழையும் காட்சிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பால்யம் இருளடைகிறது
நரம்புகளின் சூட்டையெல்லாம்
இந்தப் பூமி உறிஞ்சிக் குடிக்கிறது
எப்போதும், எங்கிருந்தோ ஒருபறவை
என் கண்ணைக் கொத்திச் செல்லுமென்று அஞ்சுகின்றேன்.

இரக்கமில்லாத காலத்தின் கடவுளே!
அன்புருக்கம் நுரைக்கும் இதயத்துடன் தினமும்
பலிகொள்ளப்படுகிறேன் எனது தெருவில்
காலமே!
ஒரு அலைக்கழிந்த பிறவியாக
இன்று,இந்தப் புள்ளியில் நின்றழுகிறேன் நான்.

எங்கே, என்முன்னோரின் கால்பட்டெழுந்த பாதைகள்
வம்சா வம்சமாய் நிலைபேறாய் நாம் வாழ்ந்த வீடுகள்
தென்கரை நீர் வெளியில்
காலவெளியின்றி விளைந்த வயல் நிலங்கள்
எல்லாம் எங்கே - எங்கே —?

ஆயிரம் கோடி பாடல்களும் பேச்சும் கூத்தும்
மதுவும் வேட்டையும் மாபெரும் பொங்கலுமாய்
நூறாயிரம் ஆண்டுகள்
தொன்மம் கொண்ட தெங்கள் வாழ்வு இவ்வூரில்
ஒரு அதிகாலைப் பொழுதிருந்து அழியத்தொடங்கிற்றே

எவ்வளவு கொடுமை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகிப்பு மீறியெழும்

நிச்சயமாக
மூவாயிரம் அடிக்குமேல்
முகில்களுக்கிடையில் ஊழையிடும் விமானங்களில்
கொலைகாரர்கள் திரிகிறார்கள்
காலவரையற்ற ஊரடங்குச் சட்டங்களிலும்
போர்ப்பிரகடனங்களுக்குள்ளும்
சிக்குண்ட இந்த நாட்களில்
ஒரு நல்ல கவிதை
அதை யாராவது எழுதட்டும்
ஆனால், இது இப்போது முக்கியமானது:
நான் உழைக்கின்றேன்
இந்தக் கோடையிலும்
எதிர்காற்றிலும்
நீயும் நன்றாக வேலைசெய்கின்றாய்.

எனது உழைப்பால்
வீடும்
எப்பொழுதும் சோலையான
தோட்டமும் எங்களுக்கிருந்தது.

பனையெலாம் நுங்குதள்ளி
சோழகம் வீசிய அந்த நாளொன்றில்
எங்கள் வீடும் தோட்டமும்
இரக்கமின்றி அழிக்கப்பட்டது
நாங்கள் விரட்டப்பட்டோம்
நாங்கள் ஓடி வரும்போது
எங்களின் பூனைக்குட்டிகள்
இடிபாட்டுக்குள் ஈனமாகக் கத்திக்கேட்டது
அந்த வேளையில்
பார்வை குறைந்த அம்மாவின்
மூக்குக்கண்ணாடியைக்கூட எடுக்கமுடியாமற் போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கமாகவும்
கடுங்கோபத்துடனும்
இந்த நிகழ்ச்சியை நான் சொல்லும்போது
பலரும் சொல்கிறார்கள்
தங்களுக்கும் இப்படிநிகழ்ந்ததென்று

இன்றைக்கும்
இராணுவத்தின் மணம்
மூக்கை எரிக்கிறது
அதன் காட்டுமிராண்டிக் கூச்சல்
காதுகளைக் கிழிக்கிறது
மாறி மாறிக் குண்டுகளைப் போட்டுச்செல்லும்
விமான ஓட்டிகளை
கோபம் பொங்கியெழ
வெறுமனே திட்டுவதையும்
முஷ்டியை ஓங்கிக் குத்துவதையும்
இனியும் நான் விரும்பவில்லை.
பறிக்கப்பட்ட
எனது வீடு எனக்கு வேண்டும்
அந்த வீட்டையும் தோட்டத்தையும்
நான் பெறவேண்டும்
உணவு
உடை
உறையுள் என்பவற்றுடன்
பாதுகாப்பும் மிக மிக அவசியமாகிவிட்டது.

கவிதையின் அனுபவிப்பு
சினிமாவின் ரசனை; ஓவியத்தில் ஈடுபாடு
என்பதெல்லாம் இதனுள் அடங்குகிறது.

அந்தப் பூனைக்குட்டிகளின்
ஈனக்குரலை
என்னால் சகிக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரந்தலைகளின் உண்மைச்சாபம்

யார் அனுமதித்தது தீக்குரலனை அங்கு?
பச்சைவர்ண வஸ்திரத்துடனும்
சர்ப்பாஸ்திரங்களுடனும்
புன்னகைத்துத் திரிகிறானே
அவன் வெடிச்சிரிப்பில் விருட்சங்கள் தீப்பிடிக்கின்றன.
பாதிவானத்தில் பட்சிகள் கருகி
எரிந்த மரங்களில் விழுகின்றன.
பிராணிகளும் புல்பூண்டுகளும் விஷமேறி மடிகின்றன.
தீக்குரலன் சிரிக்கிறான்
திக்குகள் இடிந்து விழ விழ
தீ நாக்குகள் நீட்டி நீட்டி
தீக்குரலன் சிரிக்கிறான் மதம்கொண்டு
இடம் வலம் தெரியாமல் சூரியன் தடுமாறுகிறது
இரவா பகலா என்றறியாமல்
நிலவு குழம்புகிறது
குளங்களும் வற்றிப் புழுதிகிளம்ப
தீக்குரலனின் ரதங்கள் வேலிபிரித்துப் போகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரழிந்த தடங்கள் ஊரெங்கும்
இன்னும் பனைகள் அங்கு நின்றிருக்கக்கூடுமா தனித்து?
மடிநிறைந்த இயக்கச்சிக் கிராமமே!
எழில் பொங்கிய உன்னரும் உயிர்முகம்
தீக்குரலன் விஷப்பல்லில் வெடித்துச் சிதறிற்றா?
வெளியும் காடுகளும் குடிசைகளும் சூழ
அழகிய மனதுடன்
இரண்டு கால் இரண்டு கை
மூக்கும் முளியும் வாயும் உள்ள
உண்மை மனிதரே அங்கிருந்தார்
அவர் பாடிய பாடல்கள்
அந்த மரங்களில் பூத்திருந்தன
வேரடி மண்ணில் அவர் மனமெல்லாம் பரவிக்கிடந்தது.

ஏன் தீக்குரலனே அங்கு வந்தாய்?
எல்லாவற்றிலும் தீ மூட்டிய உன்னை
யார் அனுமதித்தது?
பேய் மனத்தினனே
உனக்குப் பூவின் வாசம்புரியாது
என்றெல்லோரும்சொல்கிறார்கள்
உன் மூலம் வெடித்துப் போகட்டும் என்று
சபிக்கும் குரல் கேட்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானம் கலந்த காலம்

இன்று பௌர்ணமி
பௌத்தர்களின் புனிதநாள்
அதிகாலை துயில் கலைந்து
புத்தரின் ஞாபகங்களுடன்
இளமலர் கொய்து நீராடிப் புனிதமாக
விஹாரைக்குச் செல்கிறார்கள்
போதிசத்வர் ஞானம் பெற்ற திருநாளல்லவா
பௌணர்மிநாளை
அரசு
புனித நாளாகப் பிரகடனப்படுத்தியுள்ளது
அதனால் பள்ளி அலுவலகம் அனைத்துக்கும் விடுதலை
காலை புனிதமலரெடுத்து
நந்தாவதியும் றெஜினாவும்
விஹாரையில்
தங்களுடைய காதலர்கள்
இராணுவத்திலிருந்து
வீடு வந்து சேரவேண்டுமென்று கெஞ்சுகிறார்கள்
சேபாலவும் சோமாவதியும்
தங்களுடைய பிள்ளைகள் எப்படியாகுவார்களோ
வடக்கில் என
நடுங்கும் இதயத்துடன்
பெருகும் கண்ணீருடன்
போதிசத்வரிடம் மன்றாடுகின்றனர்
இராணுவத்தில் சேர அனுமதித்ததற்காக
மன்னிப்புக் கருணைகூர இறைஞ்சுகின்றனர்.

☆

பாதுகாப்பு அச்சுறுத்தலில்
மிகக்கவனமாய்
அமைச்சர்களும்
இன்று இந்தப் பௌர்ணமி நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலையுதிரும் வெள்ளரசின்கீழ்
புதிதாக மெருகேற்றிய விஹாரையில்
நான்கு பிரதம தேரோக்கள்
பீரித் ஓத
சண்டையில் தாங்கள் வெல்லவேண்டுமெனத் தியானிக்கின்றனர்.
துப்பாக்கியுடன் மெய்ப்பாதுகாவலர்
சூழவும் நின்றிருக்க
நாட்டின் தலைவர் பாதணியை மட்டும் கழற்றி
வெளியே வைத்து
பவ்வியமாக
புத்தரின் கால்களில் வீழ்கின்றார்.
வடதிசையில் பெருமளவு பகுதியை
இராணுவம் கைப்பற்ற வேண்டும்
பத்துப் பன்னிரண்டு செழிப்பான ஊர்கள்
உடனடியாகக் கட்டுப்பாட்டில் வரவேண்டும்
என்ற ஆசையைப் புத்தரின் தலையில் வைத்தார்.
விழிமூடிய சித்தார்த்தனின்
கடைவாயில் சிறு புன்னகை எனினும் பெருவியப்பாய
லௌகீதத்தின் நினைவுகளை எரிக்க
எப்படி இன்று இவை முளைத்தனவென்று
புத்தர் துயரடைந்தார்.
சிறுபறவையின் சிறகுகள் அரிபடவும்
தன்னுடைய போதம்நிறம்மாறிப்போனதேயென விம்மலிட்டார்.

☆

நிலவு பெருகும் இந்தப் பௌர்ணமி நாளில்
ஜயதிலக
இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும்
அரச விளம்பரத்தைப் படித்துக்கொண்டிருக்கிறான்
முந்தநாள் ஒரு சண்டையில்
இறந்துபோன இராணுவ மகன்மாரின் சடலங்களையும் காணாது
தனித்த பொடிமெனிக்கே, புஞ்சிநிலமே மாமாக்களின்
நினைவு கண்ணில் வருகிறது அவனுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆

இன்று பௌர்ணமி இரவு
வெண்ணிலவு பூத்து
மதாளித்த ஊரெல்லாம் பால்விசுறுகிறது
விஹாரையின் தூபங்களில்
பளபளப்பும் அழகும் பெருகுகிறது
அயலில் மெலிதான வயலின் இசையில்
ஒரு பாடல்
துயரத்துடன் மீட்டப்படுகிறது
போனமாதம்
வடபகுதிச் சண்டையொன்றில்
இறந்துபோன தன் அண்ணனை
வயலினில் அழைத்து வருகிறாள் சிறிமானி.

☆

பற்றற்ற ஞானத்தில்
சித்தார்த்தன் விழிமூடி நிஷ்டையிருக்கிறான்
போதிமரம் இலையுதிர்க்கிறது
மாவலி விசும்பித் துடிக்க
உயிர்நொந்து உயிர்நொந்து
ஒருதாய் கண்ணீர் வடிக்கிறாள்
தான் வாக்களித்தமைந்த அரசு
தன் பிள்ளையை
வெல்லமுடியாத யுத்தத்தில் அமிழ்த்தியுள்ளதை நினைத்து
தன் முலையுமிழும் சிறு பிள்ளையின்
நாளை ஏதாகுமென்று.

☆

புத்தனுக்கு ஞானமளித்த நிலவு
புத்தன் ஞானம் பெற்ற நிலவு
உருகி வழிகிறது எதிர்காலமற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1990 மார்கழி 25

மழையில் கரைகிறது இரவு
சாம்பலைக் கழுவி
இரத்தமாய் ஓடும் வெள்ளத்தில்
மூழ்கிப் போயிற்று எனது முற்றம்.

உமது பீடத்தில்
நகங்கள் வளர்ந்துளதா சொல்லும்
கர்த்தரே!

விடியவும்
குயில்கள் கூவுதலின்முன்பு
பறவைகள் இரு சிறகு விரிக்க முனைகையில்
பலி.
மொழியின் பேரால்
இனத்தின் பேரால்
வெறிகொண்ட மனிதரிடம் பலியாதல்.

நிலவினில் நெருப்பு
மழையினில் வெம்மை
காற்றினில் முட்சுமை
இரவின் நிழல் சுருங்கி
அச்சம் பெருக்குகின்ற இந்நாட்களில்
இன்றிரவு
உமது பிறப்பெனும் கிறிஸ்மஸ்நாளிலும்
எமது கனவுகள் சிதைய
இரத்த வெறிப் பேய்களின் உலா
வானத்திலிருந்து
உமது வருகையின் முதலே
எங்களின் தலைகளில் பேரிடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவகையுமற்று
அகதிக்கான உத்தரவாதங்களையும் இழந்து
காடுகளில்
வாழ்க்கையை ஒளித்திருக்கும்
குழந்தைகளும் பெண்களும்
கலவரமுற்ற அமைதியில்
உறைந்து போயிருக்கையில்
சூரியனின் முகத்தின் முன்
மன்றாடல்களையும் நிராகரித்துக் கொன்றனர்.

முள்முடியும் சிலுவையும் சுமந்து
உமது
முப்பத்திமூன்று வயதினில்
மகத்துவம் பெற்றீர்
ஆண்டவரே!
தாயின் மார்பினில்
முரசு கவ்வாத குழந்தைகளும்
முள்ளில் வெந்தார்
முகங்களில் சிலுவை ஏற்றார்.

மனதில் முகிழ்க்கின்ற உண்மையை
பீறிடும் சோக உணர்வில்
பீறிட்டெழும் அழுகையை
மொழியின் பேரால்
வெறுக்கின்றீரா
வெளிப்படுத்தும் கர்த்தரே!

எனது முற்றத்தில்
செவ்வரத்தை பூக்க வேண்டும்
எனது புல்வெளியில்
சற்றுநான் காலாற வேண்டும்
உமது பீடங்கள்பற்றி
எமக்குக் கவலையில்லைக் கர்த்தரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவங்களின் கூடுகள்

பாவங்களின் கூடுகள் எரிவதைக் கண்டேன்
சாபங்களும் திட்டுதல்களும்
வாங்கிப் பெற்ற நரகப்பிறவிகள்
நிணமாகிச் சிதறிப் போன செயல்பார்த்தேன்
நாலு சிறகெழுந்து
பறந்து பரவசமடைந்தேன்.

ஒரு பிறவியின் சாவு கண்டுனக்கு மகிழ்ச்சியா
என்றென்னைக் கேட்கலாம்
கேள்; நன்றாகக் கேள்
அது பற்றி எனக்குக் கவலையில்லை
நான் சாவில் வேகும்போதென்னை
கண்திறந்து பாராத உன் கேள்விபற்றி
எனக்கென்ன கவலை?

இனி நான் புழுகித்திரிவேன்.

கெந்திக் கெந்தி நானோடும் போதெனது
உயிர் தேடித் தேடி வந்த பாவத்தின் கூடுகள்
இன்று அழியுண்டு போவதைப் பார்த்தேன்.
அஸ்திரங்கள் ஏவிய தேவகுமாரரின்
வெற்றியின் கரம்பற்றி
உரத்துப் பாடினேன்
நன்றியின் உதிரம் கலந்து
என்குரல் திசைகளில் பரவியது.

நான் பாடிப்பாடி மகிழ்ந்தேன்

வெற்றியின் பூரிப்பில் சிரித்தேன்
நரகப்பிறவிகளின் சாவில் நான் சிரிப்பேன்
நானழுத காலங்களை அழிக்கும்
இந்தச்சிரிப்பு.

இப்போதும் நான் சிரிக்கிறேன்
என்னுடைய மக்களும் சிரிக்கிறார்கள்.

பாவங்களின் கூடுகள் பற்றி யாருக்குக் கவலை
யாருக்கடா கவலை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிக்கல் நாளின் வலிகள் தீருதல்

குப்பி விளக்கென்றாலும் விடிவிளக்கொன்று
இனி எப்போதெரியும்
என் வீட்டில்?
பாலாய் ஒளியூற்றிச் சுடரும்
மின் குமிழ்கள்
இனி என்று ஒளிபரப்பும் எனது வீதிகளில்?
சிறுதளிர்களும் பூக்களும் சேர்ந்த
காற்றென்று வரும் என் சுவாசத்துக்கு?
கந்தக நெடில் பரவி
குமட்டல் எழும் இந்த இரவும்
துயில மறுத்து விழித்திருக்கவே
எச்சரிக்கும் மனமும் இன்னும்
எத்தனை நாளில் தொலைந்து போகும்?

விழித்திருக்கையிலும்
விஷமேறிய கனவுகள்
என் நம்பிக்கைகளைத் தின்னுகின்றன
நடுங்குகின்ற காற்றில்
துர்நாற்றம் வீசி என் சரீரம் எரிகிறது.
எப்போதும் இரவுகளில்
திடீர் திடீரென
அவசரமாகப் பிள்ளையைத் தொட்டுப்பார்த்து
அவதியுறும் துயர்
ஐந்து வயதுக் குழந்தையின் நாளையைப் பற்றியது.
அவனது எதிர்காலம்
என்ன வென்று நிச்சயிக்க முடியாதுள்ளது.
அவனைப் பற்றிய திட்டங்களை
நினைக்கவே தடுமாற்றமாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் கேள்விகளுமே
பின்னலிடுகின்றன
எல்லாவற்றையும் விடைச்சிக்கலானதாக
விமானங்கள் பயணிகளையும்
ஏற்றிச்செல்லுமென்று
குழந்தைக்கு எப்படி நம்பிக்கை கொள்ளவைப்பதென்று
புரியவில்லை எனக்கு.
முகம் வெடித்த மனிதனாக
எனது பிம்பம்
என்னைக் காட்டுகிறது
வாழ்தல் என்பதும் மரணம் என்பதும்
நள்ளிராப் பொழுதில்
வழியற்றிருக்கையில்
காட்டெருமை துரத்துவதைப்போல
நெரிக்கின்றன.

எனது அயலில்
காற்றில் உயிர்க்கும் நம்பிக்கைகள் பெற்ற
அற்புத மனிதர் போல
போராளிகள் செல்கிறார்கள்
நின்று பேசி விடைபெற்று
வழிநெடுகப் புன்னகை மலர்த்தி
நம்பிக்கை மனிதர் செல்கிறார்
எத்தனை பூரிப்புடன்
என் பிள்ளை
அவர்கள் கை பற்றிப் பூரிக்கிறான்.

சிக்கல் நாளின் வலிகள் தீர
நம்பிக்கை மனிதர் கரங்கள் பற்றி
நடத்தல் வேண்டுமென்று துருதுருக்கிறது
வாழ்க்கையின் அழைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியொரு விலை

வீதியும் சூழலும்
இருளுள் புதைந்திருந்தன
மேசையில்
குவளைகளில் தேநீர்
அரிக்கன்லாம்பு ஒளிர்ந்தபடி இருக்கையில்
அதனைச் சூழவுமிருந்து விவாதித்தோம்.

வங்கிகள் திறக்கவில்லை
களஞ்சியம் தீர்ந்துபோகிறது
குண்டு வீச்சில்
அகதிமுகாமும் தாக்கப்பட்டுள்ளது
துறைமுகத்தில்
இராணுவமுகாமை விரைவில் அகற்ற வேண்டும்.

எனது நகரம் அழிக்கப்படினும்
எனது உணவு தடுக்கப்படினும்
சோராதுழைப்பேன்
இரண்டு துண்டு பனாட்டுப் போதும்
வெடிமணம் அடங்கா நிலத்தில்
உழுந்து பூக்கிறது
மூன்று வாரப்பயிரில் குரக்கன்
காற்றில் சாய்ந்து நிமிர
அதிகாலைப் பனியில் அவை சிலிர்க்கையில்
இன்னும் எனது நம்பிக்கை பெருகும்
குண்டுகள் நிரப்பிய துப்பாக்கி தோளிலும்
'கல்பனாதத்'தின் 'சிட்டகாங் வீரர்களு'டனும் நடக்கிறேன்.

தெருநீளவும் ஒன்றிரண்டு
சைக்கிகள் போக
தெற்கில் இராணுவ முகாமிலிருந்து
இடையிடையே சத்தங்கள் காற்றில் ஏறிவர
எனது தோழரின் சுமையைப் பகிரவும்
கருவேலம் பற்றைகளினூடு நடக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலின் மறுதலிப்பு

நேற்றுப் பின்னேரம்
அலுவலகத்திலிருந்து வருகையில்
உன் வீட்டைப் பார்த்தேன்
கறுப்பு மல்லிகைகள் பூத்திருக்க
அந்தச் செடிகளுக்கு
உன்னுடைய தம்பி வெந்நீர்விட்டுக் கொண்டிருந்தான்:

ஒரு குழந்தை
கிணற்றுக் கட்டில் தவழ்ந்து விளையாட்டுக்கொண்டிருந்தது:
நீ சுவரில் கரிக்கட்டியால்
எதையோ கிறுக்கிக் கொண்டிருந்தாய்
உன் அம்மா
வாசல் கதவை பாக்குவெட்டியால் பிளந்து கொண்டிருந்தா
பின் வளவில் பயிரெல்லாவற்றையும்
ஆடுகளைத் தின்னவிட்டுக்கொண்டிருந்தார் உனது அப்பா
இன்னமும் அவர் வாய்க்குள்
எதையோ முணுமுணுத்தபடிதான்
எல்லாம் நல்லபடி நடக்கின்றனவென
பக்கத்து வீட்டு மாமா பூரித்துநின்றார்.

உன் அக்கா மட்டும்
கோபமும் துக்கமுமாய் நின்றாள் என்னைப்போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைதெறித்த மனிதர்கள்

என்ன நிகழ்ந்தது
யாரின் கை கால்களை
எந்தத் தேவதை வருடியது?
வேர்கள் பற்றி எந்தக் கவலையுமின்றி
மரங்கள் பறந்தன வானத்தில்.

இலைகளா வேர்பிடித்துக் கிடப்பது இனி?

புராணங்களையும் இதிகாசங்களையும்
கழுகுகள், காகங்கள், நரிகள் பற்றிய கதைகளையும்
மறந்துபோன மனிதர்கள்
புன்னகை பூத்துத் திரிந்தார்கள்
'தோண்டிய கண்கள்'
தானமாக வழங்கப்படுமாம்
'பிடுங்கிய பற்கள்'
திருப்பித் தரப்படுமாம்
இனி,
தொட்டதெல்லாம் பொன்னாகும் காலமொன்று
நாற்பத்தாறாவதோ ஐம்பத்தாறாவதோ அதிசயமாக
தங்கள் ஊர்களுக்கு வந்துவிடப்போகுதென்று
கனவு கண்டார்கள் அவர்கள்.

கொன்றை மரம் பருவந்தவறியும் பூத்தது
புன்னையோ பூவரசோ எதுவோ எல்லாம் பாடத்தொடங்கின
இன்னும் ஏதோ ஆடின.

புறாவின் வருகைபற்றியும்
அதன் மகிமைபற்றியும்
மரத்தோடு மரம் பேசியது
விஷமேறிய புற்களையிட்டு இனிக்
கவலையில்லையென்று மாடுகளெல்லாம் கத்தித்திரிந்தன.
மாரியா கோடையா என்றறியாக் காலத்தில்
விதைப்புப் பற்றியும் அறுப்புப் பற்றியும்
குழம்பிக் குழம்பி
தலை தெறித்துக் கிடந்தார்கள்
என் மனிதர்கள்.

நெருப்பைத்தின்னும் காலமென்ன
தீர்ந்தா போச்சுதென்று
மனம் பெருத்த மனிதன் கேட்டான்

உண்மைதான்
சிங்கமென்ன வாளைக் கீழேயா போட்டுவிட்டது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவின் பரிசு

அவர்கள்
இரவொன்றைப் பரிசாகத் தந்தார்கள்
எனக்கு.

நான் என்ன செய்ய முடியும்
அதை வைத்து கொண்டு?

அந்த இரவுக்கு விழிகளில்லை
அமைதியுமில்லை

எனக்கு
தூங்குவதற்கோ விழித்திருப்பதற்கோ
கண்களில்லை
அவை, பகிரங்கமாகவே
என்னிடமிருந்து எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.
காற்று,
எந்தச் சேதியையும் கொண்டு வந்து
என்னிடம் சேர்த்து விடுமென்று
சாளரங்களை எச்சரித்திருந்தார்கள்
கனத்த பெரும் பூட்டுகளால்
கதவுகளுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

பேசுதற்கு ஒரு துணையில்லை

தனிமை,
வழங்கப்பட்டிருக்கிறது
எனக்கான நிரந்தரத் தனிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனிமையைச் சுகித்துக் கொள்"
என்று கட்டளையுமிட்டிருந்தார்கள்.

அது ஓர் உயிர் உரிதல் சடங்கு

உதிர்ந்த கருணைச் சொற்கள்
பாம்புகளாய் நெளிந்து போகின்றன.

இரவு,
பகலை அழைத்து வராத இரவு
நிலவைக் காட்டாத இரவு
நட்சத்திரங்கள் உதிர்ந்துபோன நீண்ட இரவு
என்னுடைய
இளமையைத் தின்னுகிறது.
வசந்தத்தின்
எல்லா ருதுக்களையும் விலக்கிவிட்டு
என்னில் முள்ளேற்றி விட்டுள்ளது.

இந்தத் தனிமை
ஒரு சுதந்திரம்
என்னுள் ஒரு உலகம் விரிந்துகொள்ள
விரியும் உலகில்
நான் உலவித்திரிய
இந்தத் தனிமை ஒரு சுதந்திரம்.
அது என்னை
இளமையோடு என்றுமிருத்தும்?

பின்னிணைப்பு: சாளரங்களும் கதவும் பூட்டுகளும் உத்தரவுப் படியும் எச்சரிக்கையின் படியும் கடமையாற் றின. சுவர்களில்கூட ஒரு பழுதில்லை. ஆனால் ஒரு உலகம் எப்படி அவனுள் இரகசியமாக நுழைந்து கொண்டது என்று அதிகாரிகள் புலன் விசாரணை செய்து கொண்டேயிருக் கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய விதிமுறை

அந்தச் சுவரில் கீறாதே மகனே
முற்றத்தில் உழக்கி விளையாடவேண்டாம்
அந்தப் பூக்களைப் பறித்தல் கூடாது
அவையொன்றும் நம்முடையவையுல்ல.
நேற்றைக்கு நாங்கள்
அந்தரிச்சு வந்தபோது
அந்த இரவிலும் இந்தவாசலைத் திறந்தார்களே
அதற்கு நன்றி
ஆகவே மகனே, பொறுத்திரு
எங்களுடைய வீட்டுக்குப் போனபிறகு
நீ ஓடித்திரி
முற்றத்தில் உன்பாட்டுக்கு விளையாடு
தளிரெறியும் மாமரத்தில்
கயிற்றூஞ்சல் கட்டிக் காற்றில் ஏறு
நிலாவில் தோய்ந்து நெடுநேரம் மணலில்
படுத்தபடி வானைப் பார்த்திரு
அதுவரைக்கும் இந்த வீட்டிலே
நாங்கள் இருப்பதே போதுமானது
மகனே,
'வேண்டாம் வேண்டாம்' எனும்
விலங்கிடும் கொடுமையை விதிக்கும் துன்பமென் வாழ்வு.

அன்பின் சிறு பூவே,
அவர்களின் பாத்திரங்களைத்
தயவு செய்து தொடாதே
கிணற்றடியில் தண்ணீரை ஊற்றவேண்டாம்
துணிகளை உன்பாட்டுக்கு போடுதல் கூடாது
ஏது செய்ய
காலம் சுருக்குக் கயிறானபின்
கண்டதுக்கும் மறுப்பைக் கட்டளையிடும்
உறவாயிற்று நமக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடு

மழை
மண்ணைக் கரைத்துக் கரைத்து
நிறபாக ஓடுகிறது
ஓடிச் சேர்கிறதுவெள்ளம்
வெள்ளத்திற்குக் கரைகளில்லை
அலைகளுமில்லை.
தெரு, பாலம், வாசல், முற்றம்
பூமரம், வேலி, தோட்டம் எல்லாவற்றையும் அடித்துப்புரட்டி
மூடிநிற்கிறது வெள்ளம்
அச்சத்தை மூட்டும் வெள்ளம்
இம்சைப் படுத்துகிறது
எல்லாவற்றையும் தன் வசமாக்கிவிட்டதாக
பெருகிக்கிடக்கிறது
வானம்கூட அதற்குள்
நட்சத்திரம், சூரியன், சந்திரன்முதல்
மரங்கள் பறவைகள்
எல்லாம் வெள்ளத்துள் பிரதிபலிக்கின்றன.

I

வெள்ளம் பெருகப் பெருக
உடைப்பு, நிகழ்ந்தது
மண்ணைக் கரைத்து
நிறமாகி
எங்கோ ஓடித் தொலைய
நிலம் உறிஞ்சியது எஞ்சியதையும்.

II

வெள்ளம்
வந்து நின்று அழித்தசுவடு கிடக்கிறது
அழியாமல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி

கடலைப் பிளந்து ஊடுருவித் தெறிக்கும்
ஒளியில்
தடுமாறி வீழ்கிறது ஒரு பறவை.
சிறகுகளின் நிழல்
நடுங்கும் அலைகளில் பிரதிபலித்துத் துடித்தழிகிறது.
பளிங்கெனத் தகிக்கும் கடல்
உஷ்ணத்தில் மையங்கொள்கிறது
மீன்கள் வழுகிச் செல்கின்றன
வழுகிச் செல்லச் செல்ல
ஒளி ஊடுருவிச் செதிள்களில் மோதி மோதித் தெறிக்கிறது

## II

கடல் பேரின்பத்தில் திளைக்கிறது
அது காற்றின் மடியில் அசைந்தாடுகிறது
கடலில் வீழ்ந்த பறவை
ஒளியைக் கவ்வி
ஒளியிலேறிப் பறக்கிறது மீண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீன்வழியில் நிழலாகி

சாம்பலாய் நிழலுருக் காட்டும்
பனைகளும் சிறுபற்றைகளும் தொலைவிற்கரைய
படகேறிப் போகிறதென் பயணம்.

வள்ளங்களை அலைக்கும் காற்றில்
என்ஜின்கள் இரைய
ஒரு படகின் பின்னால் இழுவையில்
பிணையுண்டு இழுபடும் படகுகள்.

மெல்லச் சிறுத்து
தொலைவுகொண்டு போகிறது
கிளாலிக்கரை
கையசைக்கவும்
முகந்திருப்பவும் முடியவில்லை.

என் சிறுகடலே கேளம்மா
உன்னரும் புதல்வரின்
உதிரத்தில் மூழ்கிய தேவி
நீ வேதனையில் விசும்பும்
ஒலியில் திசையடைத்துக் கிடப்பதறிவேன்
எனினும்
என் மனதையும் உன் மடியிருத்திக் கொள்ளம்மா

பீதியுண்டு அலையும் விழிகளும்
மருளும் மனமுமாக
ஒரு வாழ்வை இழந்து
ஒரு வாழ்வு தேடிப்போகுமென்விதி

பகல் நேரப் பொழுதொன்றில்
வலசையாய்
நொய்த மனிதரில் ஒருவனாய்
விம்மி அழுதபடி
விழிநீரை உன் மடியில் சிந்திச் செல்கிறேன்.

கரையில் மோதி
மோதி மோதிச் சிதறும் உன் விதிபோல
இன்றென் கதையும் ஆயிற்றென்று
காற்றிடம் சொல்வதா
இந்தக் கடற்பறவைகளிடம் சொல்வதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்முகத் தீ

உள் முகத்தீ யொளிர ஒளிர
சுடரெழுந்து
சுவாலை மூண்டு
காற்று வெளியிலேறி
எங்கும் பரவுகிறது ஒளி
வெம்மையாய் விரிந்து
வெந்தணலாய்க் கனன்று
குப்பையும் கூழமும்
கொழுத்திக் கொழுத்தி
ஒளிரும் ஒளியில்
உள்ள பொருள் சித்திரம்
இன்னும்
ஓராயிரம் வஸ்து எல்லாம்
துலங்கத் துலங்க
சூழல் வெளிக்குது
சூழலின் கோலத்தில்
காலம் விளங்குது
காலம் காலம் காலம்.

II

அடரிருள்சுமையேறிக்
கனக்கும் காலம்
இருள் கண்டுஐயுற்று
நாய் குரைக்கும் காலம்
ஆந்தைஅலறும் காலம்
பேயுலவும் காலம்
இக்காலம் கனத்ததிர்ந்து
இக்காலம் மீதுநசியும்.
ஒளிமுகத்தீ யொளிர ஒளிர
சுடரெழுந்து
சுவாலை மூண்டு
எங்கும் பரவி விரிகிறது
மீண்டும் மீண்டும்
உள் முகத்தீ! உள்முகத்தீ!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருக்கும் அச்சமின்றி மனசவிழ

பிரிவெழுதிப் பிரிவெழுதி
கைசலித்த பின்னும்
காதல் முகிழ்க்கிறது பெருகி
விழி வெடித்து
நுரைததும்ப நுரைததும்ப
இழைநீள்கிறது மனசில்
முகம் மறந்து முகம் மறந்து
போனதன் பின்னும்
போகவில்லை நினைவறுந்து
ரயிலோட
ராக்குருவி தனித்தழும்
இரவு நீள்கையில்
மனச்சுவர்கள் அதிர்கின்றன
பெருகிப் பெருகி
நீளும் நினைவுகள்
காதலின் மனம் தடவுகின்றன.

உயிரழியும் புள்ளிக் கணத்திலும்
ஒரு தரம் இயல்பாய்
புன்னகைப் போமா
விழிசேர்த்து ஒரு வார்த்தை கதைப்போமா
யாருக்கும் அச்சமின்றி மனசவிழ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் மனிதரும் துணை நடத்தலும்

ஏதொரு மாற்றமுமின்றி
மந்தமாய் இயக்கமுறும் உனது கிராமத்தில்
ஊமை வெயில் சிந்திக்கொண்டிருந்த
ஓர் மதியத்தின் பின்
பசித்த வயிற்றுடன் பனையிலிருந்து வீழ்ந்தாய்
வீழ்ந்ததும் இறந்து போனாய்.

'ரோபோ' மனிதன் இயக்கமுறும் காலத்திலும்
வெறும் மனிதக் கூலியாய்
பசி தீராதிருத்தலின் போதும்
உழைக்கும் நிர்ப்பந்தமாய் ஆனது வாழ்க்கை.

அன்றும்
பசித்த வயிற்றுடன் பனையிலிருந்து வீழ்ந்தாய்
வீழ்ந்ததும் இறந்து போனாய்.

விசாரணை அதிகாரிகளும்
மதகுருவும்
கிராமத்துப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது மரணத்தின் காரணம் பற்றி
அவர்களின் விசாரணையில்
அதன் பின் எழுதிய தீர்ப்பில்
'உணவருந்தாது
சீவலுக்குச் சென்றதனால்
உடல் தளர்வுற்றதன் காரணம்' என
அறிக்கை எழுதப்பட்டது.

விசாரணையும்
பின்னர் சடங்கும் நிகழ்ந்தன
பரிந்து பேசினர் பிரமுகர்கள்
மரணம் நிகழ்கையில்
உன் முகம் நினைவிற் கொள்ளா
உனது சிறுகுழந்தை
விஞ்ஞானம் பற்றியும்
மனிதவளர்ச்சி பற்றியும் அறிகையில்
உன் மரணம் பற்றி வியக்கும்
மனமழிந்து துன்புறும்.

கூலி மனிதரிடம்
பசியின் குவிதல் பற்றியும்
அது தீருதல் பற்றியும் அறிய முனைகையில்
அதன் வழிநடத்தலுக்கு
என் துணையை வழங்குதலில் மகிழ்வுறுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரங்காயவில்லை என்று நீயும்

எதன் நிமித்தம்
இந்தக் காற்று அலைகிறது
வசந்தி
இன்றும் பனிக்குளிரும்
தனித்த உன் இரவும்
எனது நினைவுகளும்
பிள்ளையின் எதிர்காலமும்
நாளைய செலவும்
உன்னை வதைத்திருக்கும்.

என் பிரிவில்
எந்த விருப்புமற்று
எந்த வெறுப்புமற்று
நீ இருக்கக் கற்றுக் கொண்டாயா?
உன் மனத்துயரங்களை எங்கே புதைக்கிறாய்
என்னைப் புரிந்துகொண்டதாலா
எனது செய்கையில்
ஒரு துளிர் பிறக்குமென்ற நம்பிக்கையிலா
நீ கனவுகளை அழித்துவிட்டு
இருளில் விழித்திருக்கிறாய்?

இன்றைக்கும் நீண்டதூரம் சைக்கிளோடி
வேலைக்குப் போயிருப்பாய்
எல்லாம் சலிப்புத்தரவும்
எதன் நிமித்தம்
இந்தக் காற்றுப்போல அலைகின்றாய்
இந்தக் கைகளில் இன்னும்
வலுவிருக்கிறது என்பதாலா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கிராமங்கள் நகரங்கள் பற்றிய விவரிப்பு

சடுதியாக எங்கள் நகரங்கள் அழிகின்றன
எதிர்பாராதவிதமாகபுதியநகரங்கள்சாயலோடுமுளைக்கின்றன.
அழிந்த நகரங்களில்
தனிமையும் துயரமும் வெறுமையும் சிதைவுமே
மிஞ்சிக்கிடக்கிறது.
கிராமங்களைக் கறையான்கள் தின்கின்றன
பாம்புகள் அரையும் ஒலியை
காற்று ஏந்தி வைத்திருக்கிறது
பறவைகள் தீராத அச்சத்துடன்
இந்தக்கிராமங்களைக் கடந்து செல்கின்றன
அவற்றின் சிறகுகளைக் குறிவைத்து
நிமிர்ந்திருக்கும் துப்பாக்கிகளைக் காணுந்தோறும்
அவற்றின் உயிர்
பறக்கும் நிலையிலேயே பிரிந்துவிடுகிறது.
ஒரு பறவை பறக்கும் நிலையிலேயே
இறப்பதென்பது எவ்வளவு பயங்கரமானதும் துக்கமானதும்?
ஆனாலும்
பறவைகளின் விதி இப்படி ஆகிவிட்டது.

வெறும் மைதானமாக்கப்பட்ட கிராமங்களில்
புல்டோசர்களிலும் டாங்கிகளிலும் சப்பாத்தடிகளிலும்
நொருங்கி நொருங்கித் துகள்களாகின்றன
மண்ணும் பிறவஸ்துகளும்.
துப்பாக்கிகளாலும் முட்கம்பிகளாலும்
ஒரு உலகத்தைப் படைத்துவிட
போதையேறிய விழிகளுடன்
வாழும் காலத்தை நிராகரிக்கும் கனவான்கள்.

எங்கள் ஊரின் காட்சியை
நகரத்தின் நிலையை
ஒரு புகைப்படக் காட்சியாகவோ
அல்லது கவிதையாகவோ எழுதினால்
அதைப் பார்க்கும் நீங்கள் மூர்ச்சையடைந்து விடுவீர்கள்
எனவே,அவற்றை நான் செய்யவிரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடுதியாக இறந்த நகரத்திலும் கிராமங்களிலும்
மனிதர்களின் காலம் சிதைக்கப்பட்டாயிற்று
பச்சைத்தலைகள் பச்சை ஊர்திகள்
பச்சை வஸ்துகள் பச்சை உடுப்போர்
என்று கரும்பச்சை மயமாகிற்று எங்கும்.
மரங்கள் செடிகள் பூங்கன்றுகள் பயிர்கள்
ஏதுமில்லாத பச்சை மயமாகிற்று எல்லாம்.

நாங்கள்
எடுத்துச் செல்ல முடியாத பொருட்களெல்லாம்
புராதன நகரத்தின் எச்சங்களாகிச் செழும்பூறிக்கிடக்கின்றன;
சருகடர்ந்த முற்றங்களில்
அநாதரவான சடலங்கள்
சிதைந்து துக்கத்தை மூட்டுகின்றன.
பறவைகளின் இறகுகள் காற்றில் பறந்தலைகின்றன
எங்கள் நகரத்தினதும் கிராமங்களினதும் கண்ணீர்
அகதிமக்களை மூழ்கடிக்கிறது.
சடுதியாக முளைக்கும் கிராமங்களிலும் நகரத்திலும்
கதவுகளில்லாத குடிசைகளில்
பொருட்கள் -பண்டங்கள் -இல்லாத மனிதர்கள்
இறந்த காலத்தின் மீது
கடந்து போன வாழ்வைத் தொட்டுவிட
மங்கிய நினைவுகளில் மிதக்கிறார்கள்.

இறந்து போகும் கிராமங்களில்
சனங்களை இழந்த பிறகு
வீதிகளில் புல் அடர்ந்தபிறகு
வீடுகள் தம் அழகையும் கனவையும் தொலைத்த பிறகு
எந்தக் கொம்பர்களாலும் தம்முடைய துப்பாக்கியில்
பூவைச் செருகமுடியாது, முடியவே முடியாது.
பெருகிவரும் கண்ணீரில்
உடைப்பெடுத்துவரும் துயரத்தின் பெருமூச்சில்
எந்த மகிழ்ச்சிப் பாடலையும் மீட்டவியலா
ஒரு போராளியின் பாடலைத்தவிர.

இப்படி
ஒரு காலத்தின் காட்சி
தீயில் எரிந்து மனதில் படிந்து போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு படையினனின் மனக்குறிப்புகளில்

திகிலுறைந்த கணங்கள் சூழ்ந்து
பீதி வளர்ந்தது.

உறைந்த இரத்தத்தில்
கட்டளைச் சவுக்குகள் வலியை எழுப்பின.

அதிகாலையில்
அந்தக் கிராமத்தின் மீது வேட்டுவைத்தேன்

தூக்கத்திலிருந்த இரண்டு புறாக்கள்
சிறகடித்து வீழ்ந்தன.
இரத்தம் வழிய
மரக்கிளையிலிருந்து
இலைகள் சிதறி உதிர்ந்தன.

தூர எழுந்த கூக்குரல்களை
காற்று எதிரொலித்தது.

மன்றாடும் முகங்கள்
மனதில் தோன்றின.

எனக்குக் கவசங்களில்லை
மனதில் அமைதியுமில்லை
என் மனம் கழன்று விழுந்து
என் சப்பாத்துகளிலேயே நசிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைக் குரல்
கடிவாளமிடப்பட்ட குதிரையை விரட்டுவதுபோல
என்னை விரட்டிக் கொண்டிருந்தது.
அவலக் குரல்களை
ஏந்திய காற்று நெளிந்தது.

மீண்டும் கட்டளைக்குரல்
குதிரைகளின் வேகம்.

வேட்டுகளால்
ஓலக்குரலைச் சிதறடித்தோம்.

நடுங்கும் கால்களுடன்
தளரும் துப்பாக்கியை அழுந்திப்பிடித்தபடி
பெரும் அகாலத்தைத் திறந்தவாறு
முன்னேறினேன்.

முற்றுகையிடப்பட்ட ஊரில்
மனிதர்களை இழந்த முற்றங்களில்
பூக்கள் உதிர்ந்திருந்தன
குழந்தைளை இழந்த பொம்மைகள்
தவித்துக் கொண்டிருந்தன.

பனைகளில் வளர்ந்த காற்று
என்னை உதைத்துத் தள்ளியது.

'நூறாயிரம் வருசங்கள் வேர்கொண்ட
அன்புள்ள மனிதரின் மிஞ்சிய காலடிகளை
அள்ளிச் செல்லாதே என்னருமைக் காற்றே'
என்று இரையும் பனைகளின் குரலைக்
கேட்டதிர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபாயம்

ஒரு இரவை
நாய்கள் குரைத்துக் குரைத்துச் சீரழிக்கின்றன
யாரோ வளர்த்த நாய்கள்
யாரையும் பொருட்டெனவுணராமல்
வயிறெக்கிக் குரைக்கின்றன.

நாய்களின் குரல் மோதிச் சிதறுகிறது என் தூக்கம்
தூக்கம் சிதறிய வெற்றிடத்தில்
முளைத்துப் பரவுகின்றன
'தணல் பூத்துச் சொரியும்
மரங்களுக்குக் கீழே
நிழலுக்கொதுங்கு' என்று
தண்ணீருக்குள் நின்றபடி
குரலுயர்த்திக் கேருகிற
நேற்று
என்னோடு இருந்துவிட்டுப் போன போர்வழியின் ஞாபகங்கள்.

தீய்ந்து போய்
வெடித்துப் பிசிறுசிந்தச் சிந்த
கண் கண்ணாய்
பொங்கிப் பொங்கி வெடிக்கின்றன
கடந்த காலங்களில்
அவனோடு இருந்த பொழுதுகள்

துக்கமும் வெட்கமும்
வதைக்கின்றன கோபமூட்டி

நாய்களின் குரைப்பில்
இந்த இரவோடு
என் தூக்கமும் அதன் கனவுகளும் சிதைகின்றன.
நாய்கள் பற்றிய என் கவலையெல்லாம்
அவற்றை வளர்ப்போரைக் குறித்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்று அறியும் உண்மை

வெண்ணிற அரசி உலாப்போனாள்
கருமையைப்படரவிட்டுப் படரவிட்டு
பகல்களையும் இரவாக்கி
திசைகளெங்கும் இருள்வர்ணங்குழைத்து அப்பினாள்.

அப்படியே ஆபிரிக்காவின் நதிகளிலும்
விஷமுள்ளைத் தூவினாள்.
புற்களுக்கும் அவள் பூசினாள் இருளின் நிறத்தை
பூக்களும் இனிக்கறுப்புத்தானென்றாள்
வானத்தை நீலமென்று சொன்னவரை நகைத்தாள்
பின் அழைத்து விலங்கிட்டாள்
பறவைகள இனிப்பறப்பது தீதென்றாள்.

புதிர்களும் கேலியும்
மகாஜனங்களின் மொழியாகிற்று
அரசியோ மிருகங்கள் இனிப்பறக்குமென்றும்
மேதைகள் அலைவார்களென்றும்
தீர்க்கதரிசனம் சொன்னாள்
தனக்கே மூலவேர் உண்டென்றும்
தனதே ஆதிவிக்கிரமென்றும் புலம்பினாள்.
தன்னுடைய சிங்கம் வெள்ளையென்றும்
அதன்கையிலிருப்பது வாளல்ல
அது ஒரு பூங்கொத்துத் தானென்றும்
அவள் சத்தியஞ்செய்தாள்.

☆

வெண்கொற்றக்குடையின் கீழ்
அரசியின் விழிகளிலிருந்து ஊனம் வழிந்தது
நிணம் நாறிக்காற்றுலர்ந்தது
மகாஜனங்கள் புலன்களை அடக்கினார்கள்

☆

வடகீழ்த்திசையிலிருந்து நகைப்பொலிகேட்டது
இயல்பின் வண்ணங்களுடன் எல்லாமிருக்க
ஒரு ஒளிப்புள்ளி வளர்ந்து கொண்டிருந்தது
கோடிவருஷங்கள் உண்மையறிந்த காற்று
'நானறிவேன் இங்குள
தமிழ் ஒலியின் காலத்தொகை' என்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னல்

அன்று பின்னேரம்
பொழுதிறங்கச் செல்லும் பஸ்ஸில்
நாங்கள் பயணித்தோம்
நகரத்திலிருந்து மீண்டு
வனப்புற மரங்களின் நிழலுள்ளோடி
வெளியில் இறங்கியது பஸ்
வெள்ளைப் பூக்களால் விரிந்த பெருமுற்றமாய்
கோடை மலர்த்திய வயல்வெளியில்
முகம் புதைத்தலைந்தன மாடுகள்
அநேகமாய் எல்லாமே வெள்ளைப்பசுக்கள்
இடையிடையே தனித்த பனைகள் கோடுகளாய்.

வயலின் பின்புறமாய்
உறைந்த பெருங்காட்டின் பின்னே
மாலைச் சூரியன் நம்மோடு ஒளிந்தும் மிதந்தும்.
செம்மண் தெருவில்
புழுதிவாரி ஓடும் பஸ்ஸினுள்ளே
நீ யன்னலோரம் நின்றாய்
நானோ ஒரு வயோதிபனின் அருகே
யாரோ இரண்டு பிள்ளைகள் நமக்கிடையில்.

யன்னல்வழி காற்றை விலக்கி
என் மனமிறங்கிப் பரவிற்று
அவ் வெளியெலாம் சுவறி.
வெளி உன்னுள்ளும்
தன்னை விரித்ததை உன்கண்கள் பிரதிபலித்தன.
அக்கணத்திலேயே
வெளியாக மலர்ந்தனவல்லவா நம் கவிதைகள் பூக்குரலோடு.

தூர, நீள்வரிசைக் கூட்டமாய்
மரங்களில் முளைத்துப் பறந்தன பறவைகள்
வர்ணங்குழைத்த வானத்தின் மீது.
நீயும் அவற்றோடு சேர்ந்து போனாயா
அன்பே!
நம் மௌனத்தை நிறைத்தது எஞ்ஜின் இரைச்சல்.

பஸ்ஸோடிக் கரைத்தது வெளியை
வெளியோ சுழன்று தவித்தது கண்ணில்
காற்றளைந்த உன் கூந்தல் பறந்து துடிக்க
ஆதித்தீ மூண்டது என்னுள்.
சகீ!
பெருகிவரும் தூசியோடு
இருளடரும் காட்டினுள்ளே நுழைந்ததடி பஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுடைய பறவை

பறந்து கொண்டிருக்கிறது அப்பறவை

அதன் நிழல்
காலம் நீளத்துக்கும்
பூமியில் பிரியாது அசைகிறது.

சிறகின் அசைவொலி திரண்டு திரண்டு
பேரண்டத்தின் உயிரில் சப்திக்கிறது

இன்னும் எல்லாத்திசையிலும் முகம்வைத்து
பறக்கும் அப்பறவையின் பறத்தல்
என்னைத் தன்வசமாக்கிச் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழும் துரோகம்

என்னுடைய எல்லா இரவுகளிலும்
திரும்பத் திரும்ப
இந்தக் கனவு வருகிறது

நீங்கள் என்னோடு இருக்கிறீர்கள்
என் இதயத்தில்
மலர்களால் வருடிக்கொண்டு
என் உதடுகளில்
பனித்துளியாய் ஈரப்படுத்திக்கொண்டு
என் பாடல்களில்
இசையாய் இணைந்துகொண்டு
புல் வெளிகளில்
பட்சிகளின் குதூகலத்தோடு
இரவுகளின் ஆழ்ந்த அமைதியில்
காற்றில் கரைந்தபடி
பனந்தோப்புகளிலும் வகுப்பறைகளிலும்
பின்னேரங்களிலும்
என் தோள்களை அணைத்தவாறு நீங்கள்.

முன்னிரவில்
மலர்களின் ஒளியில் முகம்பளபளக்க
நாம் முத்தமிடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைபொழிய
பொன்னிற வெயில் பசுந்தரையில் ஒளிர்கிறது
புன்னகையின் வசீகரம் நிறைந்த
இன்பத்தைப் பெய்யும் காலத்தில் மிதக்கிறோம்
நிலவொளியில்
நம் இதயங்கள் அன்பொழுகுகின்றன.
எல்லா வீதிகளிலும் சந்திக்கின்றோம்
ஒரு வாசலில் நுழைந்து
பல வாசல்களால் வருகிறோம்
முற்றங்களில்
நம் சுவடுகள் பூக்களாகின்றன
திறந்த வாசல்களிலிருந்தெல்லாம்
சொற்களினூடு பயணிக்கின்றோம்
மரங்களின் கனிகளிலும்
மலர்களின் நிறங்களிலும்
திடீரென நீங்கள் மறைகிறீர்கள்

என் எல்லாக் கனவுகளிலும்
இந்தத் துரோகம் நிகழ்கிறது

மீண்டும் அறுந்து தொங்கும் கனவில்
முனைகள் நீளும் பொருளொன்று
மிதந்து வருகிறது
இதயத்தைப்போலத் துடித்துக்கொண்டு
இல்லை அது இதயந்தான்
மறைந்த உங்களின் உருவோடு

அதன் நீலமாய் ஒளிரும் ஒளியில்
கண் மங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகிய காதல்

ஒரு துளி வீழ்ந்ததும் சிலிர்த்தது கடல்
தாகம் பொங்கியெழ
துடித்துத் துடித்து
தன்னை விரித்துத் தவித்தது.

கடலின் மார்பு சுரந்தது
அதன் விழிகள் வானத்தை உறிஞ்சின
ஆமாம்
உன்னைப்போல,
உன்னைப்போலவேதான்.

மழை
தூறித் தூறிப் பொழிந்தது
பெரும் பொழிவு
காதலின் பொங்குதல்...
கடலில் மோகங் கொண்டு
மழை கடலைத் தழுவியது

கடலோ மழையைக் குடித்தது.

கடலும் மழையும்
மழையும் கடலும்

நீரும் நீரும் சேர்ந்து
புணரும் காட்சி அது

அதைப் பார்க்க ஆசையா?

மழையும் கடலும் சேரும்போது
இன்பம் பெருகி வழியும் வழியும்.

அது கோடி அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடு நிழல்

காலை நெகிழவும்
இரண்டு ஹெலிகொப்ரர்கள் மிக அவசரமாய்
எங்கள் கிராமத்தைச் சுற்றின
கிழக்கே பறக்கும் பறவைகள்
சிதைந்து திசைமாறின
முற்றத்தில் கிடந்த நாய் எழுந்தோடி
மரத்தின் கீழ் பதுங்கியது
பைத்தியக் காரத்தனமாய்
இடைவிடாது இரண்டு ஹெலிகளும் சுட்டுத்தள்ளின.

ஒரு கனவுபோல
அல்லது விறுவிறுப்பான
ஆங்கிலப்பட வர்ணனைபோலவும்
இவை உமக்குத்தோன்றும்
ஆனால் அது நடந்தது
எங்கள் தலைகளின் மேல்
'ஹெலிகள்' சுற்றவும்
இரண்டிரண்டாக அணிவகுத்து
குண்டுவீச்சு விமானங்கள்
பீதியூட்டும் கீரிடலுடன் வட்டமிட்டன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்மலுறும் இதயத்துடன்
விழிகள் பிதுங்க
வீட்டிலிருந்தும் வெளியே ஓடினோம்.
நிலத்தில்
முகம் மோதிப் படுக்கவும்
நெஞ்சுமுறியக் குண்டுகள் வீழ்ந்தன
நினைவழியக் கனவெரியத் திக்கிடிந்தன.
கூடத்துள் அடைகிடந்த கூட்டம் புறாக்கள்
சிறகடித்து அலறின
சில தென்னையில் மோதிச் சிறகறுந்து
மல்லாந்தன
உயிரறுந்தது எங்கும் ஓர்கணம்.

ஓய்வென்று வீட்டிலிருந்த
அவர்களின் 'பெரஹரா' நாளில்
எந்தச் சிறு நிம்மதியுமின்றி
எங்கள் வம்சமறியாக் காலம்முதல்
இருந்த இடம் விட்டோடினோம்.

மழைபொழிந்த அந்த மதியச்சுமையில்
உயிர் சுமந்து
வதையும் நெஞ்சுடன் வழிநடந்தோம்
'பௌர்ணமி நிலவில்
எங்கள் ஊர் வெறும் நினைவே'
என்றபடி நாம் ஒரு மரத்தடியில்
அடுப்பை மூட்டுவதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றின் மணல் முற்றம்

சவுக்கந்தோப்பில்
இரைகிற காற்று
வெண்மணலின் மீது தன்னை எழுதிற்று
அலைகள் மிதந்த
மணற்கடலாக விரிந்தன
'வெள்ளைவெளி' மணற்திடல்கள்.

கால்கள் புதையப் புதைய
மணல் அலைகளில் நடந்துகொண்டிருந்தோம்
ஒரு புதிய பாதை பூத்து விரிந்தது.

நீ நின்று
என் பெயரை எழுதினாய்
பிறகு
அருகே
உன் பெயரையும் எழுதினாய்
நாங்கள் புன்னகைத்தோம்
வானம் நீலமாய் ஒளிவீசியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Bonifass**, அருமை நண்பனே!
சவுக்கு மரங்களை
வருடிவரும் காற்று
நம் முகங்களையும் முத்தமிட்டுச்சென்றது
திடீரென்று
நீ விம்மினாய்
'மணல் அலைகளின்
அமைதியைச் சிதைத்தோம்
அவற்றின் அழகில் காலைவைத்தோம்'
என்று அழுதாய்.

வடுக்கண்டிருந்தது வெளி.

நாம் நடக்கவிரும்பவில்லை
மேலும் வெளியைச் சிதைக்க வேண்டாம்
மேலும்
அலைகளின் மவுனத்தைக் குழப்பவும் வேண்டாம்.

காற்றே!
நம்மைத் தூக்கிச் செல்
வெளிக்கு அப்பாலே வீசிவிடு
எல்லாத் தழும்புகளையும்
அழித்து
மீண்டும்
மணலின் முகத்தில்
உன் கவிதையை எழுதிவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகிர்ந்து கொள்ளும் கணத்தில்

யாரது என் வாசல் வரை வந்து
நிழல் விழுத்திச் செல்வது?
வந்து தயங்கித் தாமதித்து
மௌனமாகிப்பின் வாங்கிச் செல்லும்
ரகசிய மென்ன?
என்னுடன் மனம் விரித்துப் பேசுவதற்கு
கோடி ரகசியங்கள் கொண்டுவந்து கொண்டுவந்து
பிறகு, பொத்திப் பொத்திச் செல்லும்
வித்தைக்காரரே!
என்ன மாயத்தில் சுழல்கின்றீர்
அவிழ்த்து விடுக உம் ரகசியக் கட்டுகளை
மனதின் மெல்லிதழ் முடிச்சுகளை
என் வாசல் நுழைந்து வந்து விடுக
அல்லது சற்றுப் பொறுத்திரும் நான் வந்துவிடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலப்பெயர்வு

அறைச்சுவரில் நின்றாடுது காலம்
தொடக்கப் புள்ளியை உணரமுடியா
கோடுகளின் அசைவில்
பறக்கிறது ஓவியக்கனவு
தன்னை இங்கே இருத்திவிட்டுப்போன
அந்த ஓவியனின் உள்ளத்தைத் தொடும் ஆவலில்
என் துடிப்பு ஆவேசமாய் ஈர்ப்பாய்
கோடுகளில் வசமாயின.

நிற்கும் சுவரிலிருந்தும்
அசையும் கலண்டரிலிருந்தும்
பறந்கொண்டிருக்கிறது அப்பறவை.

அதன் வாயில் தொங்குகிறது மனம்.

இனியும்
எங்கேனும் ஒரு புள்ளியில்
அசைவை நிகழ்த்துவான் அந்த ஓவியன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை வெளியில் துளிர்க்கின்றது மரம்

சூரியன் நெருப்பை ஊற்றட்டும்

வீட்டுக்கூரை தீப்பற்றாது
வானம் எரியாது
கடல் சிறுக்காது
காற்றுவெளியில் உயரும் பறவையின்
சிறகுகள் அனலில் தீயாது.

எனக்கான திசை வெளியில்
இலைகள் துளிர்க்கின்றன மரத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயக் கிழவியின் ஓவியம்

போய் விழுந்தாய்
புகைமூடிய சிறுஇடுக்கில் குடல் பெருத்து
கலங்கலாய் விழித்திரை விரிய
மாயக்கிழவியின் ஓவியம் பார்த்தாய்.
எல்லோரும் தலைகளின்றியும்
தலைகளுள்ளவர் மரணபீதியில் பிதற்றுவதாயும்
அவ்வோவியங்கள் காட்சி காட்டின உனக்கு.
பிதற்றினாய் முன்வாய்ப்பற்கள் இழந்து
நாவறுந்த நாவால் எல்லாம் தொலைத்தவன்போல்
எல்லாம் வேண்டுபவன் போல்.

கலங்கல் விழித்திரையினூடு ஊறி
மெல்லப் பாய்கிறது உன்மனதில்
மாயக்கிழவியின் ஓவியக் கவர்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புழுக்களின் உலகில்

ஒரு மதிய வெயிலில்
இளைப்பாறும் மையமெதுவுமின்றி
அலைந்து அலைந்து ஒதுங்கினேன்
ஒரு சரித்திரம் இற்றுக் கொண்டிருக்கும் தெருவில்.
அழிவுற்ற புராதன மகிமைகளின் எச்சங்களில்
தடக்கி விழுந்தேன் புழுக்களின் அலைமிதப்பில்.

என் பற்கள் கழன்று விழ
வாய் நிறையப் புழுக்கள் கெம்பிப் புகுந்தன.
கண் காது மூக்கு எல்லாவற்றுள்ளும்
நுழையும் ஆவலாதியில் அவற்றின் துடிப்பு.
எங்கும் சிதறிக் கிடக்கும்
மண்டையோட்டிலிருந்தும் எலும்புகளிலிருந்தும்
பெருகி வரும் புழுக்கள்
என் கால்களை மொய்க்கின்றன.
சடுதியாக,
குப்புறக் கிடக்கும்
என்னுடம்பைத் தின்னும் மூர்க்கத்தில் துளைக்கின்றன.

வலி தின்கிறது உயிரை
இம்சை என்னை விழுங்குகின்றது.
என் சத்தக் குழாயில்
ஒலியை உறுஞ்சிக் குடித்தபடி
உயிரின் ஞாபகத்தைத் தின்று தின்று
ஊனத்தில் நெளிகின்றன மேலும் புழுக்கள்.

ரத்தம்
சதை
எலும்புகள்
எல்லாம் புழுக்களின் ஆனந்த உலகம்

நான் இழந்தேன் என் உலகத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருகையாளரிடம் கேள்வி

ஒருவரை யொருவர் சந்திக்க முடியா
துரத்தலில்
எப்போதும் உனக்கிருக்கும் வெறியென்ன?
நீவரும் மர்மமான தருணங்களிலும்
தூசி கிளம்பி வானம் திணற
நம் முற்றங்களின் மேலால்
குதிரைகளின் குழம்பொலியதிர
நீ வருகையிலும்
பீதியுற்று
இடிந்து போய்
சாவைத் தூக்கிக்கொண்டு ஓடுவதுபோல
நம்மை நாமே காவிச்செல்கிறோம்.

அந்தக் கடைசிக் கணத்தில்
தகர்ந்த வீட்டின் அடிக்கல்லில்
நம் வாழ்வின் மிச்சம் தேம்பிக்கிடந்தது
தோட்டம் அழிந்திருந்தது

பூமரங்களின் சிதைவில்
நம் மகிழ்ச்சி
கலைந்திருப்பதைப் பார்த்திருப்பாய்
உனது வருகையின் போதெல்லாம் இப்படி
துயரமே இழைபட்டுக் கொண்டிருக்கிறது.
அன்பிழை அறுந்து
சந்திக்கமுடியா நிரந்தர இடைவெளியை
தொடர்ந்தும் வைத்திருப்பதில்
உனக்கொரு சலிப்புமில்லையா?

ஒரு ஸ்தூலமான
ஒளிப்புள்ளியில் மையமிட
என்றேனும் எண்ணமில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுமை

மூக்கில் எச்சமடித்துப் பறக்கின்றன
வெளவால்கள்
என் விழிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறது ஆந்தை
அதன் கண்கள் இருளில் மினுங்கி மினுங்கி
என் விழிகளை ஊடுருவுகின்றன.

என் உதடு உலர்ந்து போகிறது;

இருளைப் பொழிந்து பொழிந்து தள்ளும்
இரவில் தனித்து நிற்கிறேன் வெளியே
வாசல் சாத்திக் கிடக்கிறது
ஆந்தையின் கண்களில்
நான் நடுங்குகின்றேன்
என் தனிமையைக் கொல்லாதே ஆந்தையே!
தனிமையின் அந்தரங்கங்களில்
என்னை முடிந்து வைத்துள்ளேன்
தயவுசெய்து என்விழிகளை விட்டுவிடு.

மறுகணம்
மூக்கில் எச்சமடித்து
முகத்தில் மோதிமோதிப் பறக்கின்றன வெளவால்கள்
மறுகணமும் மறுகணமும்
விழிகளை ஊடுருவுகின்றன ஆந்தையின் கண்கள்.

வெளவால்கள்
இருட்டு
துயரம்
ஆந்தையின் விழிகள்
எல்லாவற்றிலும்
நான் இறந்து கொண்டிருக்கிறேன் முடிவற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானத்தின் நிரந்தரம்

என்னைத் திகைப்பூட்டிக் கொண்டேயிருக்கும்
ஒரு மர்மமாகவே இருக்கிறது
இந்த வானத்தின் நிரந்தரம்
வீடுகளுக்கு அப்பால்
வேலிகளுக்கு அப்பால்
ஊர்களுக்கு அப்பால்
வெளிகளுக்கு அப்பால்
காடுகளுக்கு அப்பால்
கடலுக்கு அப்பால்
அது அகன்று கவிந்துள்ளது
தொடுவது போலத் தொடாமல்
முத்தமிட்டுக் கொண்டேயிருக்கிறது.

எங்கே நின்று நோக்கினும்
அங்கேயே அது மாறும் நிரந்தரத்தில்
மையமாகத் தோன்றுகிறது.

வானத்தின் நிறம்
அதன் ஒளிர்வு
அதன் ஆழம்
அதன் விரிவு
எல்லாவற்றோடும் அது நிரந்தரமாக இருக்கிறது.

காடுகள், வீடுகள், மலைகள், ஊர்கள்
நகரங்கள், நதிகள், வெளிகள்
மற்றும் கடலுக்கும் அது பின்னணியாகவுள்ளது
மிதக்கும் விமானத்துக்கும்
பறக்கும் பட்சிக்கும் கூட அது பின்னணியே.

எல்லா நிச்சயமின்மைகளுக்கும் அப்பால்
இந்த வானத்தின் நிரந்தரம்
என்னைத் திகைப்பூட்டிக் கொண்டேயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய்விழி

உன்னயல் நான் வர
மனவழி மறுத்துக் கருமை படர்கிறது
என் ஒளி மங்கிய இக்காலத்தில்
வறுமைக்கும்
இயலாமைக்குமிடையில்
கண்ணீரையும் துக்கத்தையும் தவிர
வேறெதையும் நாம் பெறமுடியாது நண்ப.

கனவுகள் எரிந்த சாம்பலில்
உன் முகம் கறுத்துப் போயிற்று
குசேலத் தீ மூண்டு உன் உடல் எரிந்து
மனம் வெதும்பி
நீயிருக்கையில்
வெறுமை படர்ந்த வார்த்தைகளால்
குளிர்ச்சியையோ மலர்ச்சியையோ
வேறெந்த வல்லமைகளையுமோ நான் தர இயலாது
தயவுடன் நான் வராமல் விடுகிறேன்.

உன் வயிற்றுத் தீ
என்னைத் துடிக்க வைக்கிறது
துயரினாழத்துள் புதைக்கிறது.
கொடிய காலத்தின் நிராதரவான பிறவியாக
நான் உன் உறவில் விளைந்தேன்
ஞானமும் போகமுமற்ற விதி யுனக்கும்
பல்லிளித்து மயக்க
என் மடியில் அன்பை மலர்த்தினாய்.

சாபத்தின் நிழலில்
வாழ்வழிந்து
உதிரும் சருகாகிப் போகிறது
இன்றுன் காலம்.
நமக்கான கனிமரம் எங்குமே யில்லை
நீ என்னைப் பேசாதே
என் முகத்திலும்
காலமறைந்த பேய்க் காயமாக
வறுமை பிளந்து கிடக்கு
என் வரவை
என் நினைவுகொழுந்தை
உன் வயிற்றில் மூண்டெரியும் தீயிலே எரித்துவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரு ஏறும் காலம்

புதைகுழிகளின் மீது
குந்தியிருக்கிறது காகம்.

துயரத்தோடு அல்லது வன்மத்தோடு
புதைக்கப்படும் பிணங்கள்
தனிமையில்
கிடந்தழிகின்றன.

ஒவ்வொரு புதைகுழியிலும்
துலங்காத மர்மங்கள்
அவிழாப் புதிர் பெய்யப் பெய்ய
புதைகுழி ரகஷ்யம்
காலத்தில் விரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்களும் வண்ணத்துப்பூச்சியும்

பூக்களின் மீது ஊஞ்சலாடுது
வண்ணத்துப்பூச்சி.

பூக்களை முத்தமிட்டு முத்தமிட்டு
பூக்களின் நிறங்களின் மீது
கனவுகளை வரையுது அது.

கனவுகள் வாசனை யோடு
காற்றில் எழுந்து பறக்கின்றன

கனவுகளின் மீது ஒளிபடர்ந்து நிறங்களாகின்றது

நிறங்களின் மீது பறந்து பறந்து
கோலமிழைக்குது வண்ணத்துப்பூச்சி
வண்ணத்துப்பூச்சியின் கோலங்களில்
காற்று மயங்கி மயங்கி ஒளியில் சரிகிறது.
வண்ணத்துப்பூச்சி பூக்களை விட்டுப்பிரிந்து
பறந்து போகிறது.
வண்ணத்துப்பூச்சியுடன் பறக்க முடியாமல்
தவித்தபடி தம் கனவுகளை இழக்கின்றன
பூக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழல் பற்றி

### 1

சுழல்கிறது நிழல்
சிறுத்தும் பெருத்தும் வித்தைகாட்டி
சுவடற்றுச் சுமையற்றுக்
கோலமிடும்
சுழலும் நிழல்
இருளில் கரைந்து போகிறது
மீண்டும் மறுபொழுது ஒளிபெற
மாறாத அதே நிறத்துடன்
அதே லீலைகளுடன்
அதே சுழலில்
கலையும் அதே இயல்புடன்.

### 2

அசையாமல் நிற்கிறது
கோபுரம்
அசைந்தழிகிறது நிழல்
எல்லோர் காலிலும் மிதிபட்டுக்கொண்டு.

### 3

நிழல் தேடித்தவிக்கிறது
ஆதிமனம்
நிழலிழந்து அலைகிறது
புதுவாழ்வு
நிழல்பற்றிய கனவுகளோடு
கழிகிறது என் காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

பெருநடை மனிதரின் அகதிமுகம்
நிழலின் கீழ் சரணடைகிறது
உயிர் வதையாய் வாழ்வின் சுமைநசிக்க
மனந்தடவி நிழல் தேற்றுகிறது
ஆதிவேராய்
மீண்டுந் தொடங்குகிறது
நிழலில் தஞ்சமடைந்த வாழ்க்கை
பசிதீரா நாளும்
வளரும் துயரும் சூழ்ந்த மனிதர்களின்
மேலொரு கையாய்
ஆசீர்வதிக்கும் நிழல்.

## 5

நிழல் விசும்புகிறது இரகசியமாய்
யாரும் அதன் துயரை
நினைவு கொள்ளவில்லை
யாரும் அதன் மௌனத்தை
மனதெடுக்கவில்லை
யாரும் அதன் மாறாத சினேகத்தை
நினைவு கூரவில்லை
நிழல் விசும்புகிறது
சிதைவுகளுக்கப்பாலான நித்தியத்துக்காக

## 6

பறக்கும் அப்பறவையின்
நிழலில்
உறங்குகிறேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1**

மயில் அகவும்
குரலொலி கேட்கிறது
ஒலி வந்த திசையில் கவனம் பதிய
தெரிகின்றன மரங்கள்
மீளவும்
மயில்களின் குரல்
இங்கிருக்கத் தெரியவில்லை
மயில்கள்
மரங்களின் முகடுகள் மட்டும்
உறைநிலையில் காண்கின்றன.

**2**

பரந்து அடையாளப் படுத்தும் மரங்கள்
ஒலியற்று
அசைவற்றுத் தெரிகின்றன
இங்கிருந்து காண்கையில்
பழகிய உணர்தலில்
அவை அசையும்
அசைவில் ஒலியும்.

**3**

அலுவலகம் செல்லும் வழியில்
தனித்த மரங்களே
இங்கிருந்து காண
விருட்சமாய்ப் பரந்திருக்கும் அவையும்
ஒரு சோலையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிகாசம்

இரவின் துயரம் பகலுக்கில்லை
பகலோ
ஒளியால் நிரம்பியது
ஆனபோதும்
பகலின் மனம் சிதைந்தது
ஆரவாரங்களும் கூச்சலும்
இரைச்சலும் நிறைந்தது.

அந்தரத்தில் தொங்கும் சூரியன்
பகலின் துடிக்கும் ஆன்மா.

வசவுகளாலும்
பொய்களாலும்
பகல்
சதா உதிர்ந்துகொண்டேயிருக்கிறது.

பகலின் அழிவு
ஒரு கிண்ணத்தில்
இரவாய் நிரம்புகிறது
நிரம்பும் இரவில் நுரைக்கிறது தனிமை,
இரவின் தனிமையில்
வளர்கிறது முழுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது பாசாங்குகளற்றது
அமைதியும் இசையும் நிறைந்த
மாபெரும் வெளியானது.

இரவின் காட்சிகள்
அசையும் பாறைகள் போலவும்
உலவும் சிற்பங்களாயும்
மிளிரும் உருவங்கள்.

இரவின் மனோமா
முகையவிழும் மலரின் இதழ்களில்
விரிந்து கொண்டேயிருக்கிறது எல்லையற்று:

தனிமையும்
அமைதியும்
இருளும்
உறைந்த
இரவின் துயரம் வலியது எனினும்
அன்பும் கருணையும் காதலும்
நிறைந்தது.

இரவு நிரம்பிய கிண்ணத்திலிருந்து
எழுந்து வருகிறது பகல்
சாபம் பெற்ற ஒரு பாவியைப்போல
அதன் அமைதியிழந்த முகம்
அறையப்பட்டிருக்கிறது காலத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசலில் தொங்கும் பகைமனம்

நான் சற்றும் எதிர்பாராத
சுழலில் சிக்கி
போரின் வாசலில் வீழ்ந்தேன்
போர்
வெற்றிபற்றிய கனவுகளை
சித்திரங்களாகத் தீட்டிக்கொண்டிருந்தது
வாழ்வின்மீது சினேகம் கொள்வோரே!
போர் ஒரு கலை
வேடிக்கையின் விளைபொருள் அது
வெற்றிக் களிப்பின் மிதத்தலுக்காக
பீதியின் மையத்தில் சுழ்லும் வித்தை
எதையும் நிதானிக்க முடியவில்லை
குதிரைகள் நெருங்குகின்றன
வீரர்கள் வேகத்தின் பிதாக்களாக
சுழன்று மின்னுகிறார்கள்
மின்னும் கணங்களாக தலைகள் சரிய
வெற்றிபெறும் தருணங்கள்
வந்தபடியும் விலகியவாறும்
ஐயோ!
எங்கும் பேரிரைச்சல்
எல்லாம் சிவப்புமயம்; வடிகிறது குருதி
இரத்தம் சிவப்பு
அபாயமும் சிவப்பு
உயிரும் சிவப்பாக வடிந்துபோகிறது
அஸ்தமனத்தில் வானமும் சிவப்பு
உதயத்தில் சூரியனும் சிவப்பு
எதையும் நிதானிக்க முடியவில்லை
குதிரைகள் நெருங்குகின்றன.
சுழலும் வாளின் கூர்விளிம்பில்
மின்னுகிறது பகைமனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரங்கள் நிறைந்த நினைவுகள்

மரங்கள் மகிழ்ந்த காலத்தை
நான் பார்த்திருக்கிறேன்.
பட்சிகளுடன் குதூகலிக்கும்
தலையெல்லாம் பூச்சூடி
ஒளி ததும்பி அசையும் அவை
காற்றில் அசைந்தபடி
தமக்குள் ரசித்தவாறு
நின்று மகிழும்.

குழந்தைத் துளிர்மை
குதூகலித்தொளிரும் பெண்ணின் மலர்ச்சி
தாய்மை ததும்பும் கனிவு
தாத்தாவின் கரமாய் விரியும் நிழலென
மரங்கள் நிற்கின்றன எப்போதும்

எல்லா ஞாபகங்களிலும்
பசுமையாய் நிறைந்தபடிக்கு
மலர்கின்ற மரங்கள்
நீயும் நானும் சந்தித்த போதுகளில்
நம்மருகில் இருந்த மரங்கள்
பள்ளிசெல்லும் வழியில்
பழங்களோடு நின்ற மரங்கள்
வீட்டில் நாமெல்லாம்
ஊஞ்சல் ஆடிய மரங்கள்
நீ, என்னை விட்டுச்சென்றபின்
உன் பெயரை
நான் செதுக்கிவைத்த மரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சத்துக்கெல்லாம் பழங்கள் தருமென்று
ஐயா நாட்டி வைத்த மரங்கள்
இரவெல்லாம் நான் தனித்திருக்கையில்
நிலவின் கீழ் உன்னை நினைத்திருக்கையில்
நிழல் ஓவியத்தை மலர்த்திய மரங்கள்
வெயில் தகிக்கும் போதுகளில்
தாத்தாவை
அருகில் அழைத்துப் பேசும் மரங்கள்
ஊரெல்லையில்
காவலாயும் சாட்சியாயும் நிற்கும் மரங்கள்
யாரோ இருத்தி விட்டுப்போன
கடவுள்களுக்கெல்லாம்
துணையாயிருக்கும் மரங்கள்
தூக்கணாங் குருவிக்கூடுகளை வைத்திருந்தபடியே
கண்ணாமூச்சி விளையாடும் மரங்கள்
எல்லா வசையும் கேட்ட பின்னும்
எந்தக் கோபமுமின்றி
தெருக்கரையில் மௌனமாய் நிற்கும் மரங்கள்
எல்லா இலையும் உதிர்ந்தபின்னும்
மீண்டும்
துளிர்ப்பேன் என்ற நம்பிக்கையோடு
என்றும் நிற்கும் மரங்கள்
வானமும் எனது
பூமியும் எனது
வீசும் காற்றும் எனது
என்று எப்போதுமிருக்கும் மரங்கள்

பட்டபின்னும் மரங்கள்
வனத்தின் அழகையும்
நிழலின் குளுமையையும்
நினைவூட்டிக் கொண்டேயிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாறையின் சிதைவு

வனத்தின் ஆழத்தில்
புலியின் கண்கள் மின்னுகின்றன
கெமுனுவே, எச்சரிக்கை
நரமாமிசம் மணக்கிறது உன்னில்
எலும்புக் கூடுகளும் மண்டையோடுகளும்
குருதி சிந்தும் விழிகளும் நாறித் தொங்குகின்றன.

கெமுனு!
அபாயம் உன்னைச் சூழ்கிறது
புலியின் குரலில் வனம் அதிர்கிறது
அதன் விழியொளியில் காடு துலங்குகிறது.

கெமுனுவே!
உன் மறைவிடங்கள் தெரிகின்றன
உன் மனதைப் புழு அரித்தது
ஆசையில் விபரீதம் பூத்து
வேட்டைக்கு வந்தாயா வனத்தின் ஆழத்தில்?
உனக்கு என்ன சொல்வேன் கெமுனுவே!
காட்டின் இலைகளில் புலியின் உறுமல் ஒலி
படிந்து போயிருக்கிறது
மரங்களின் வேர்களில் அதன் கால்கள் பிணைந்திருக்கின்றன
வனம் முழுதும்
புலியின் சுவடுகளே மிதக்கின்றன
வனத்துக்கும் புலிக்குமான உறவு
கோடிவருசங்கள் தொன்மத்தில் விளைந்ததல்லவா!

கெமுனு!
திரும்பு
வனத்தின் ஆழத்துள் சிக்காதே
புலியின் கால்களைச் சீண்டாதே
வேட்டை உனக்கு வேண்டாம்
உன்னுடைய குதிரைகளைக் காப்பாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றை மயிரின் சரித்திரம்

நான் இறந்து போனதாக
என்றோ போய்ச் சொல்வார் ஒருவர்
நான் இறந்து போனேன் தான்
ஞாபகங்கள் சேரத் தொடங்கிய
அந்த நாட்களின் பிறகு நான்
வாழ்ந்ததாக ஞாபகமில்லை இன்னும்.
பிறகெல்லாம் துக்கப்படுவதும்
கொந்தளிப்பதும் சலிப்பதுவும்
மறந்துபோய்ப் புன்னகைத்துத் திடீரென்று
நாக்கறுபட்டு இறுகிக் கல்லாவதும்
இது நாள் வரையும் ஆகிவருகிறது.

பிணத்தைக் கண்டபின்னும்
பிணமாகிப் போனபின்னும் கூடத்
தீராமல் பொருமுகிறது நஞ்சுக்கொடி
நஞ்சுக் கொடிக்கு நீர் விட்டுக் கொண்டிருப்பது
அற்றுப் போகும் நாளிலிருந்து
நான் வாழக் கூடும். பிறகு
நான் இருந்து, இறந்ததாகவும் யாரும் சொல்லக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைக் கண்டறியும்
போதும் அதனோடு
இணைந்திருக்கும் போதும்
தனிமையும் துயரமும் இயல்பாக
வந்து சேருகின்றன. இந்தத்
தனிமையும் துயரமுமே என்
வாழ்வின் பெரும் பகுதியாகவும்
இருக்கின்றது ஆனாலும் இது
பேராறுதலைத் தருகின்றது. இந்த
ஆறுதல் நிறைவை ஏற்படுத்துவது.
இந்த நிறைவு ஒரு பூரணத்துவமே.
இதுவே மகிழ்வும்.

இந்தக் கவிதைகள் குறித்து
எனக்குப் பெருமையோ
ஆட்சேபனையோ இல்லை.
என்வாழ்விலும் என் காலத்திலும்
இப்படியெல்லாம் எழுத
நேர்ந்திருக்கிறது, அவ்வளவுதான்.
மொழியையும் காலத்தையும்
என்னையும் இணைக்க
என்னளவில் முயன்றிருக்கிறேன்
என்பதைத்தவிர வேறென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org